# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 28 வியாழக்கிழமை (13-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:291


# 20 பேர் கொண்ட அமைச்சரவை நாளையேதான் பதவியேற்கும்!

## அதற்கு முன்னோடியாக பிரதமர் இன்று ராஜினாமா?

கொழும்பு,செப்ரெம்பர்13

அதிகாரத்தைத் தக்கவைக்கும் நடவடிக்கையாக ஜே.வி.பியின் நிபந்தனைகள் மற்றும் அதற்கான காலக்கெடுக்கள் ஆகியவற்றை முற்றும் முழுதுமாக ஏற்றுக்கொண்டு, உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ள அரசு, அதன்படி நேற்றைய தினத்துக்கு முன்னர் தனது அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை இருபதாகக் குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஜே.வி.பியின் இணக்கத்தோடு அதனை நாளைவரை ஒத்தி வைத்துள்ளது அரசு.

சோதிட விதிகளின்படி புதிய அமைச்சரவை அமைப்பதற்கு நேற்றைய தினம் பொருத்தமானது அல்ல எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே அது நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது.

புதிய அமைச்சரவை அமைப்பது தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு மேலும் ஓரிரு தினங்கள் கால அவகாசம் தருமாறு அரசு ஜே.வி.பியை கடிதம் மூலம் கோரியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கு ஜே.வி.பியின் சம்மதம் வழங்கியதையடுத்து, புதிய அமைச்சரவை அமைப்பது நாளைவரை தள்ளிப்போடப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' மீது டக்ளஸ் மானநஷ்ட வழக்காம்!

யாழ்ப்பாணம்,செப்.13

'உதயன்' நாளிதழின் ஆசிரியர் மற்றும் பிரசுரிப்பாளர்களுக்கு எதிராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்று ஈ.பி.டி.பி. நேற்று உதயனுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி உதயனில் வெளியான 'வாசகர் திருமுகம்' பகுதியில் அமைச்சருக்கு அவதூறு கற்பிக்கும் வகையில் உண்மைக்கு மாறான விடயங்கள் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிவித்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும்-

இந்த விடயம் சம்பந்தமாக யாழ்ப்பாணப் பொலீஸ் நிலையத்திலும் அமைச்சர் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார் என்றும் -

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் எந்த நீதிமன்றத்தில் எப்போது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. (உ)

## அரசில் முஸ்லிம் காங்கிரஸை இணைக்க ஜனாதிபதி முயற்சி

கொழும்பு,செப்.13

அரசில் இருந்து வெளியேறிய முஸ்லிம் காங்கிரஸை மீண்டும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் இணைத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி முயற்சி செய்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்களன்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் அவரது குழுவினரும் ஜனாதிபதி குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைகள், அதிகாரப்பரவலாக்கல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இணைந்து புலிகளுடன் பேச்சு நடத்துவது குறித்து அரசுக்கும் - எதிர்த்தரப்புக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ய ஹக்கீம் தயாராம்!

### ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் அவரே தகவல்

கொழும்பு,செப்.13

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் முரண்பட்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசிலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த திங்களன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைத் திடீரெனச் சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட ரவூப் ஹக்கீம் -

"இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு முன்னர் அது விடயத்தில் அரசு - எதிர்க்கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு இணைந்து புலிகளுடன் பேசும் விவகாரம் தொடர்பாக அரசுக்கும் எதிரணிக்கும் இடையில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் மத்தியஸ்தராகச் செயற்பட நான் தயாராக இருக்கின்றேன். இதனையே ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்தேன்" - என்றார்.

"எனக்கு அரசில் சேரும் எண்ணமோ அமைச்சராகும் விருப்பமோ இல்லை. நாம் தொடர்ந்து எதிரணியிலேயே இருப்போம். சுதந்திரமாகச் செயற்படவே விரும்புகின்றோம். எனவே நாம் ஆளும் தரப்புப் பக்கத்துக்குப் போவோம் என்ற பேச்சுக்கே இடமில்லை" - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த திங்களன்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய ஹக்கீம், அச்சந்திப்பின் விவரங்களை நேற்று ஐ.தே.கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் கரு ஜயசூரிய ஆகியோரைச் சந்தித்து விளக்கினார்.

எதிர்த்தரப்பில் இருந்துகொண்டே புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தும் விவகாரத்தில் அரசையும் எதிரணியையும் இணைந்து செயற்பட வைக்கும் முயற்சியில் மத்தியஸதம் செய்யத் தாங்கள் தயார் என்பது குறித்தும் ரணிலிடமும் எடுத்துரைத்ததாக ஹக்கீம் குறிப்பிட்டார். (உ)

## அரசு புலிகளுடன் பேசுவதை ஜே.வி.பி. அனுமதிக்காது!

### ரில்வின் சில்வா மீண்டும் தெரிவிப்பு

கொழும்பு,செப்.13

"அரசு புலிகளுடன் பேச்சு நடத்துவதை நாம் அனுமதிக்க மாட்டோம்."

- ஜே.வி.பியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரில்வின் சில்வா இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

மல்வத்தை மகாநாயக்கர் ரம்புக்வெவ விபஸ்ஸி தேரரை நேற்று சந்தித்த போதே இப்படி மகாநாயக்கரிடம் அவர் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

தாம் அரசுக்கு முன்வைத்துள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மாணவருக்கு ரிக்கெட் வழங்கும் விடயத்தால் 'றான்' அலுவலகத்தில் களேபரம்

யாழ்ப்பாணம்,செப்.13

காங்கேசன்துறையில் இருந்து இன்று புறப்படும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் பயணம் செய்வதற்கு பயணச்சீட்டு வழங்குமாறு கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நூறு பேர் மணியம் கட்டடத்தில் உள்ள 'றான்' அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அதனால் அங்கு ஏற்பட்ட பதற்ற நிலையைத் தணிக்க மேலதிகப் பொலீஸார் வரவழைக்கப்பட்டனர்.

இன்று புறப்படும் கப்பலுக்கான பயணச்சீட்டு வழங்கும் பணி நேற்றுக் காலை 10மணிக்கு 'றான்' அலுவலகத்தில் ஆரம்பமானது.

பயணச்சீட்டுப் பெறுவதற்காக அதிகாலை 2மணி முதல் 'றான்' அலுவலக வாயிலில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுமார் நூறு மாணவ, மாணவிகள் 'கியூ'வில் காத்திருந்தனர் என்று கூறப்படுகிறது.

எனினும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு மட்டுமே பயணச்சீட்டு வழங்கமுடியும் என அங்கு அறிவிக்கப்பட்டதும் பரபரப்பான சூழ்நிலை உருவாகியது.

'கியூ'வில் காத்திருந்த பல்கலைக்கழக மாணவர்கள் மதில்களால் ஏறிப் பாய்ந்து பயணச்சீட்டு வழங்கும் பகுதிக்குச் சென்று அங்கு நிலத்தில் அமர்ந்து கொண்டனர்.

இதனை அடுத்து அங்கு பதற்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தாக்குதல்: உயிரிழந்தோரின் எண்ணிக்கை இன்னும் கணக்கிடப்படவில்லை!

நியூயோர்க்,செப்.13

அமெரிக்கக் கேந்திர நிலையங்கள் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட விமானங்கள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை இன்னும் சரியாகக் கணக்கிடப்படவில்லை.

ஆனால் மொத்தம் பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

சரியான புள்ளிவிவரம் இரண்டொரு நாள்களில் இறுதியாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்

(12ஆம் பக்கம் பார்க்க)

*மேலும் செய்திகள் 2ஆம் 3ஆம் பக்கங்களில்*


பெற்றோர்களே!

உங்கள் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுக்கும் தினம் (22.09.2001) சனிக்கிழமை

மறந்துவிடாதீர்கள்!!

MANKIND IS OUR BUSINESS

PolioPlus Rotary International

- யாழ்.றோட்டறிக் கழகம்


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விமான சேவை இன்னும் இல்லை

நியூயோர்க்,செப்.13

விமானம் மூலமான தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து மூடப்பட்ட அமெரிக்க வான் பிராந்தியப் போக்குவரத்து நேற்றிரவு வரை மீளத் திறக்கப்படவில்லை. இதனால் அமெரிக்க வான் பரப்பில் விமானப்படை விமானங்களைத் தவிர பயணிகள் மற்றும் சரக்கு விமானங்கள் ஏதும் நேற்றும் பறக்கவில்லை.

அமெரிக்காவில் விமானப் போக்குவரத்து மீண்டும் எப்போது ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படவில்லை.

எனினும் -

சகல விமான நிலையங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள், பயணிகள் பரிசோதனை நடவடிக்கைகள் என்பன நூறு வீதம் சரியாக உள்ளன என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே விமாக சேவை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

# தலிபான் எதிர்ப்புக் குழுத் தலைவர் கொலை முயற்சியில் தப்பினார்

காபூல்,செப்.13

தலிபான் எதிர்ப்புக் குழுத் தலைவர் அஹமட் ஷாமசூட் தற்கொலைத் தாக்குதலிலிருந்து உயிர் தப்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

மசூட்டைப் பேட்டி காண வந்ததாகக் கூறிய இரு அரேபியர்கள் தமது உடலில் கட்டப்பட்டிருந்த குண்டை வெடிக்க வைத்ததாகவும் -

ஆனால் மசூட் காயங்களுடன் உயிர் தப்பிவிட்டதாகவும் தலிபான் எதிர்ப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

அவர் வோஜா பஹாவுடீனில் உள்ள அவரது இல்லத்தில் சிகிச்சை பெற்றுவருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

# காபூல் விமான நிலையத்தின் மீது தலிபான் எதிர்ப்பாளர் தாக்குதல்!

ஆப்கானிஸ்தானின் காபூல் விமான நிலையத்தின் மீது நேற்று அதி காலை முதல் தலிபான் எதிர்ப்புக் குழுவினர் 'ரொக்கெற்' தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக பாகிஸ்தானிலிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

தங்கள் படைகளுக்கு எதிராக, தலிபான் 'ஜெட்'விமானங்கள் நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடியாக, நேற்றுக் காலை தாமும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திய தாக தலிபான் எதிர்ப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

காபூல் நகரின் வடகிழக்கே அமைந்துள்ள இராணுவம் மற்றும் சிவில் விமான நிலையப் பகுதி நேற்றுக் காலை முதல் பயங்கர வெடிச் சத்தங்களால் அதிர்ந்தபடி இருந்ததாகவும் -

நேற்று நண்பகலுக்குப் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டதாகவும் - அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

உலக அரங்கில்

தலிபான் எதிர்ப்புக் குழுத் தளபதி மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்குப் பதிலடியாகவே தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ள காபூல் விமான நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஒ-4)


## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
## 450 கிராம் பாணின் உச்சவிலை ரூ.12.00

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாவின் விலை அதிகரிக்கப்பட்டதனால் நாளை (14.09.2001) வெள்ளிக்கிழமையிலிருந்து 450 கிராம் பாணின் உச்சவிலை 12.00 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதனை எமது பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்,
யா.மா.பே.உ.சங்கம்.

(C/18249)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பத்தினிப்பிள்ளை

கொட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும் மாவடி வட்டுக்கோட்டையைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்தினிப்பிள்ளை நேற்று (12.09.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைரமுத்து - தெய்வானை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சிவபாக்கியம் (லண்டன்), யோகேஸ்வரி, சுப்பிரமணியம் (கனடா), இராஜேந்திரம் (திருநெல்வேலி ஸ்ரோர்ஸ்), சண்முகநாதன், சந்திரவதனி (மட்டக்களப்பு), தயாபரன் (சுவிஸ்), இராஜசுலோசனா, சரோஜினிதேவி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான கோகிலராணி, கணேசரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கதிரவேலுப்பிள்ளை, தனஞ்ஜெயன், புஸ்பமாலா (கனடா), பூவராணி, அன்னலஷ்சுமி, சிறிராம் (மட்டக்களப்பு), மாலினி (சுவிஸ்), குணதாசன் (குவைத்), சிவனேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2001) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இராஜேந்திரம்
(திருநெல்வேலி ஸ்ரோர்ஸ்)

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.
(C/18258)

## சுவாமிநாதர் கந்தையா (சு.க)

புதுத்தோட்ட ஒழுங்கை, துன்னாலை மேற்கு, கரவெட்டியில் வசிக்கும் விநாயகர் மில் ஸ்தாபகர் சுவாமிநாதர் கந்தையா(சு.க) நேற்று (12.09.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி க.முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற க.தவபாலசிங்கத்தின் அன்புத் தந்தையாரும் திருமதி த.சிவதேவரத்தினத்தின் அன்பு மாமனாரும் த.தபோதயன் (நோர்வே), த.தபோதரன்(கனடா), திருமதி சு.தபோதினி, செல்வி த.தபோநிதி, ஆ.சுதர்சன் (யா/மணல்காடு றோ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2001) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணியளவில் வேரோண்டை குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும்.

புதுத்தோட்ட ஒழுங்கை,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.
(C/18256)

த.தபோதயன்
(பேரன்)

## அமெரிக்கா மீதான தாக்குதல்கள்

# வர்த்தக மையத்தின் இடிபாடுகளை அகற்றப் பல வாரங்கள் செல்லலாம்!

## உயிருடன் சிக்கியோரை மீட்பதில் சந்தேகம்

நியூயோர்க்,செப்.13

நியூயோர்க் மான்ஹட்டனில் விமானத் தற்கொலைத் தாக்குதலில் தகர்ந்த உலக வர்த்தக மையத்தின் அடுக்கு மாடிக் கோபுரங்கள் இரண்டினதும் இடிபாடுகளை அகற்றும் பணி பூர்த்தியாகப் பல வாரங்கள் பிடிக்கும் என்று 'ஸ்கை ரீ.வி' யின் செய்தியாளர் கூறுகின்றார்.

இடிபாடுகளில் இன்னும் நெருப்புத் தணியவில்லை, தீ கனன்று கொண்டிருக்கின்றது. அதை நெருங்குவதே மிகக் கஷ்டமாக உள்ளது. அத்தோடு இடிபாடுகள் மேலும் மேலும் நொறுங்கிப் புதையும் நிலை காணப்படுவதாகவும் -

ஏற்கனவே ஆரம்பத்தில் தீப்பிடித்த கட்டடத்தில் மீட்புப் பணிக்குச் சென்ற இருநூறுக்கும் அதிக படையினர், கட்டடம் நொறுங்கி வீழ்ந்த சமயம் அதனுள் புதையுண்டு போனதால் அச்சமடைந்திருக்கும் ஏனைய மீட்புப் பணியாளர்கள் தற்போது கட்டட மிச்சங்களுக்குள் நெருங்கி, ஊடுருவிச் செல்ல பின்னடிப்பதாகவும் - கூறப்படுகின்றது.

இடிபாடுகளை அகற்றுவதற்கான பாரிய இயந்திரங்கள், கருவிகள் பக்கத்து மாநிலங்களில் இருந்து அவசர அவசரமாக மான்ஹட்டனுக்கு எடுத்துவரப்படுவதாகவும் -

அவை வந்து சேர்ந்ததும் மீட்புப் பணியில் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் - கூறப்பட்டது.

இந்த அடுக்கு மாடிக் கட்டடத் தொடரில் நிலத்துக்குக் கீழ் எழுபது அடி ஆழத்துக்கு கட்டடப் பகுதி அமைந்திருந்ததாகவும் -

அதன் ஒரு பகுதிக்குள் மேல் மாடிகள் இடிந்து புதைந்துவிட்டதாகவும் -

மற்றொரு பகுதிக்குள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் சிக்கியிருப்பதாகக் கருதப்படுவதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

மீட்புப் பணி இதே மந்தநிலையில் தொடர்ந்தால் இவர்களை உயிருடன் மீட்பது சந்தேகத்துக்குரியதாகிவிடும் என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர். (உ)

# தாக்குதலை யுத்த நடவடிக்கை என்கிறார் புஷ்!

வாஷிங்ரன்,செப்.13

கடத்தப்பட்ட விமானங்கள் மூலம நேற்றுமுன்தினம் அமெரிக்கக் கேந்திர நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை 'பயங்கரவாத நடவடிக்கை' என்று ஆரம்பத்தில் வர்ணித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் நேற்றிரவு (இலங்கை நேரப்படி) நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது அவற்றை 'போர் நடவடிக்கை (Acts of War) என்று குறிப்பிட்டார். (உ)

# நிதி மையத்தில் தீப்பிடித்தது!

நியூயோர்க்,செப்.13

விமானத் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்கான உலக வர்த்தக மையத்தின் அருகே அமைந்திருந்த உலக நிதிமையத்தில் நேற்றுப் பிற்பகலில் தீப்பிடித்துக் கொண்டது.

மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட பழுது காரணமாகவே தீப்பிடித்ததாகக் கூறப்பட்டது.

இந்தத் தீ பெரிய அளவில் சேதங்களை ஏற்படுத்த முன்னர் அணைக்கப்பட்டது. (உ-ஒ)

# பெண்டகனில் 800. பேர் பலி!

வாஷிங்ரன்,செப்.13

விமானத் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்கான அமெரிக்காவின் பாதுகாப்பு மையமான பெண்டகனில் சுமார் எண்ணூறு பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களின் 82 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பெண்டகனில் ஏற்பட்ட சேதங்களின இடிபாடுகளுக்கு இடையில் எவரும் உயிருடன் இருப்பர்கள் என்ற நம்பிக்கை இல்லாததால் அங்கு அவசர மீட்புப் பணி கைவிடப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது. (உ)

# பின்லேடன் மறுப்பு

லண்டன்,செப்.13

அமெரிக்காவில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கும் தமக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று இஸ்லாமியத் தீவிரவாதத் தலைவரான ஒஸாமா பின்லேடன் மறுத்துள்ளார். (உ)

# மத்திய லண்டன் மீது விமானங்கள் பறக்கத் தடை!

லண்டன், செப்.13

அமெரிக்கா மீதான தாக்குதல்களை அடுத்து மத்திய லண்டன் மீது விமானங்கள் பறப்பதற்கு பிரிட்டிஷ் அரசு தடை விதித்துள்ளது. இது ஒரு பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவுக்கான விமான சேவைகள் கனடாவுக்கும் பிரிட்டனுக்கும் திருப்பிவிடப்பட்டதால் லண்டன் ஹீத்ரோ விமான நிலையம் விமானப் போக்குரைத்து நெருக்கடிக்கு ஈடுகொடுக்க முடியாது திண்டாடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## உலக வர்த்தக மையத்தில்

# மீட்புப் பணியாளர் 350 பேரும் இடிபாடுகளுள் புதைந்தனர்!

நியூயோர்க்,செப்.13

விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்கு இலக்கான நியூயோர்க் உலக வர்த்தக மையக் கட்டடத்தில் மீட்புப் பணிகளை மேற்கொண்டிருந்த சுமார் 350 மீட்புப் பணியாளர்கள் பின்னர் கட்டடம் இடிந்து தரைமட்டமானதில் அதன் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் காலை உலக வர்த்தக மையத்தின் 110 மாடிகளைக் கொண்ட இரட்டைக் கோபுரங்களின் மீது விமானத் தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதும் மீட்புப் பணியாளர்கள் கட்டடத்துக்குள் சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

அந்தச் சமயத்தில் இரட்டைக் கட்டடங்கள் இரண்டும் பொல பொலவென்று தகர்ந்து விழுந்து தரை மட்டமாகின.

இதில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த 80 பொலீஸார் மற்றும் சுமார் 250க்கும் மேற்பட்ட தீயணைப்புப் படை வீரர்கள் இடிபாடுகளுக்குள் புதைந்து போயினர். (ஒ)

## 110 மாடி அடுக்குக் கோபுரத்தின்

# இடிபாடுகளுக்குள் சிக்கியோர் 'செலூலர்' மூலம் தொடர்பு

நியூயோர்க்,செப்.13

விமானத் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகி தரைமட்டமான உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கட்டடங்களின் இடிபாடுகளுக்கிடையில் சிக்கியுள்ள சிலர் தம்மிடமிருந்த 'செலூலர்'(கைத்) தொலைபேசிகள் மூலம் வெளியில் உள்ளவர்களுடன் தொடர்புகளை நேற்று ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் பொலீஸார் தங்களிடம் இருந்த 'வயர்லெஸ்' மூலம் பொலீஸ் பிரிவுகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் -

இதனையடுத்து மீட்புப் பணி முழு அளவில் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் 110 மாடிகள் நொறுங்கி விழுந்துள்ள நிலையில் அந்த இடிபாடுகளை அகற்றி அவற்றுக்கு அடியில் சிக்கியிருப்போரை அடுத்த ஓரிரு நாள்களில் மீட்பது சாத்தியமா என்பது குறித்து சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் -

இடிபாடுகளுக்கிடையில் சிக்கியிருந்த எட்டுப் பேர் நேற்று உயிருடன் மீட்கப்பட்டதாக அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்தது. (உ-ஒ)

# கத்திகளைக் காட்டியே விமானத்தைக் கடத்தினர்

நியூயோர்க்,செப்.13

நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீதும் வாஷிங்ரனில் உள்ள பெண்டகன் மீதும் நேற்றுமுன்தினம் தற்கொலை விமானத் தாக்குதல்களை நடத்தியவர்கள் கத்திகளைக் காட்டியே தாக்குதல் நடத்திய விமானங்களைக் கடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் அரபு நாட்டவர்கள் ஐவரைத் தாம் அடையாளங் கண்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியவர்கள் சவூதி அரேபிய கோடீஸ்வரரும் அமெரிக்காவால் சர்வதேச பயங்கரவாதி என்று கூறப்படுபவருமான ஒஸாமா பின்லேடனின் ஆதரவாளர்கள் என்று அமெரிக்கா கருதுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ)

# அமெரிக்காவில் தாக்குதல்கள்; பலஸ்தீனர்கள் கொண்டாட்டம்!

காஸா,செப்.13

அமெரிக்காவில் விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட செய்தி பரவியதுமே, மேற்குக் கரை மற்றும் காஸா பிரதேசங்களில் பலஸ்தீனக் கொடிகளுடன் வீதிகளில் இறங்கிய பலஸ்தீனர்கள் குதூகலக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

தாக்குதலின் பின்னர் உயிரைக் கையில் பிடித்தபடி அமெரிக்கர்கள் வீதியில் ஓடுவதைத் தொலைக்காட்சியில் பார்த்த பலஸ்தீனர்கள் உயிருக்காக ஓடுவதை அமெரிக்கர்கள் இப்போது தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று தொலைக்காட்சி செய்தியாளரிடம் தெரிவித்ததை தொலைக்காட்சி ஒன்று ஒளிபரப்பியது.

லெபனானிலுள்ள பலஸ்தீன அகதி முகாம்களிலும் ஈராக்கிலும் கூட மக்கள் விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் குறித்து மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். ஐரோப்பாவிலும் புலம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. (உ-ஒ)

# ஆட்டம் கண்ட அமெரிக்க வல்லமை

1980களில் வெளிவந்த ஆங்கிலத் திரைப்படங்கள் 'ரம்போ' (Rambo), 'ரம்போ II' ஆகியவை அமெரிக்காவில் பெரும் வெற்றியைப் பெற்று வசூலை அள்ளிக்குவித்தன.

இந்தப் படங்களின் வெற்றி குறித்து, உளவியல் நிபுணர் ஒருவர் கருத்துத் தெரிவித்த போது -

"வியட்நாமியப் போரில் அமெரிக்கா அடைந்த தோல்வி, அமெரிக்கர்களின் மனங்களில் ஆழமான காயமாகப் பதிந்து விட்டது. வியட்நாமியப் போரில் பங்குபற்றிய 'ரம்போ' என்ற அமெரிக்க இராணுவ வீரன் ஒருவனின் சாகஸங்களை அடிப்படையாகக் கொண்ட இந்தத் திரைப்படங்கள் தமது மனக் காயத்துக்கு - அவமான உணர்வுக்கு - இதமாக மருந்திட்டதாக அமெரிக்கர்கள் உணர்ந்ததாலேயே விரும்பிப் பார்த்தனர்" என்று கூறியிருந்தார்.

வியட்நாமியப் போரை விட அமெரிக்கர்களின் - சுயகௌரவத்தை - தன்மானத்தை - வல்லரசு என்ற பெருமிதத்தை - உலகை ஆட்டிப்படைக்கும் சக்தி தமது நாட்டுக்கு உண்டு என்ற எண்ணத்தை - மற்றைய நாட்டு உள் விவகாரங்களில் மூக்கை நுழைத்து, தான்தோன்றித்தனமாக நடக்கும் தைரியத்தை - இப்படிப் பல 'திமிர்'களைக் கொண்ட மனப்போக்குக்கு பெருத்த அடியாக விழுந்துள்ளது "இப்போது நடந்த விமானத் தற்கொலைத் தாக்குதல்கள்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜப்பானிய போர் விமானி ஒருவர், பிரிட்டிஷ் கப்பலின் மீது தனது விமானத்தை மோதி தற்கொலைத் தாக்குதல் நடத்திய கதையை உலகம் இதுவரை பேசிவந்தது.

அதன்பின்னர் இடம்பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்களாகக் கருதப்படும் தற்போதைய தாக்குதல்கள் விளைவித்த உயிர், உடைமைச் சேதங்கள் மிக மிக அதிகம் தான்.



பின்லேடன்

ஆனால் தாக்குதல்களால் அமெரிக்காவின் வல்லமைக்கு ஏற்பட்ட அடி மிக அதிகம் என்று கருதப்படுகிறது.

காரணம், தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இலக்குகள் மற்றும் அவை இடம்பெற்ற சமயம் -

உலகமயமாதல், காப்புரிமை வழங்கல் உட்பட பல விடயங்களில் உலகப் பொருளாதாரத்தை தனக்குச் சாதகமாக வளைக்கமுயற்சிக்கும் -

உலகவங்கி உட்பட சர்வதேச அமைப்புகளில் தனது செல்வாக்கை நிலைநாட்டத் துடிக்கும் -

அமெரிக்காவின் பொருளாதார வல்லமையின் சின்னமாகக் கருதப்படும் - உலக வர்த்தக மையம் மீது முதல் விமானம் மோதியது.

அமெரிக்காவின் வர்த்தகத் தலைநகர் நியூயோர்க்கில் 110 மாடிகளைக் கொண்ட இரட்டைக் கட்டடங்களில் செயற்பட்டு வந்தது உலக வர்த்தக மையம்.

அதன் தெற்குக் கட்டடத்தில் முதல் விமானமும், சில நிமிடங்கள் கழித்து அருகே இருந்த மற்றக் கட்டடத்தில் இரண்டாவது விமானமும் மோதித் தாக்கின.

சுமார் 50 ஆயிரம் பேர் பணியாற்றும் உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் உலகப் பொருளாதாரத்தில் அமெரிக்கா செலுத்தும் எதேச்சதிகாரப் போக்குக்கு எதிரான குறியீடாகவே கருதப்படுகிறது.

இதைப் போலவே -

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்ரனில் உள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பெண்டகன்' மீது மூன்றாவது விமானம் மோதியது.

வாஷிங்ரனில் ஐங்கோண வடிவத்தில் அமைந்த கட்டடத்தில் செயற்பட்டு வந்தது அமெரிக்க இராணுவத் தலைமையகம்.

உலகின் மிகப்பெரிய அலுவலகக் கட்டடம் என்ற பெருமை கொண்ட பெண்டகனில் சுமார் 20ஆயிரம் பேர் பணியாற்றினர். பெண்டகனின் ஒரு பக்கக் கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல், உலகின் பொலீஸ்காரனாகத் தன்னைக் கருதும் அமெரிக்காவின் போக்குக்கும் -

தனது மேலாண்மைக்கு எதிராகச் செயற்படும் நாடுகளின் தலைவர்கள் மற்றும் அரசுகளை அகற்ற அல்லது ஒழித்துக் கட்ட அமெரிக்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும்-

சர்வதேச மேலாதிக்கத்தைப் பயன்படுத்தி, பிறநாடுகளின் இறையாண்மையை உதாசீனப்படுத்தி அவற்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் அமெரிக்காவின் முயற்சிகளுக்கும் -

அமெரிக்கப் புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ. (C.I.A)யின் சதிகளை மறைத்துக்கொண்டு, பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறி, சுய உரிமைகளுக்காகப் போராடும் இன விடுதலைப் போராட்டங்களை நசுக்கும் அமெரிக்காவின் செயல்களுக்கும் -

'பெண்டகன்' மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல் ஓர் எச்சரிக்கையாகவே கருதப்படுகிறது.

இந்தத் தற்கொலைத் தாக்குதல்கள் நடந்தபோது அமெரிக்க அரசின் இராஜாங்க அமைச்சு மற்றும் காங்கிரஸ் கட்டடம் ஆகியவற்றின் அருகே குண்டு ஒன்று வெடித்ததாகவும் கூறப்படுகிறது.

இது அடுத்த நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை மணியாக இருக்கக் கூடும்.

தீவிரவாதத்தை எதிர்கொள்வது என்பது அமெரிக்காவுக்கு இது முதல் தடவையல்லத்தான்.

1993ஆம் ஆண்டு இதே உலக வர்த்தக மையத்தின் கீழ்த் தளத்தில் குண்டு வெடித்ததில் 6பேர் கொல்லப்பட்டனர்.

1995இல் அமெரிக்க இராணுவ வீரரான மக் வே தேசியக் கட்டடம் மீது நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் 168 பேர் உயிரிழந்ததும், இது தொடர்பாக மக் வேக்கு சமீபத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டதும் பழைய கதை.

1998இல் கென்யா மற்றும் தன்சானியாவில் அமெரிக்கத் தூதரகங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் 224 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

ஆனால் அந்தத் தாக்குதல்களை சுண்டைக் காய்களாக்கிவிட்டன தற்போதைய விமானத் தற்கொலைத் தாக்குதல்கள்.

இந்தத் தாக்குதல்களின் பின் விளைவுகளைச் சமாளிக்க வேண்டிய கட்டாயமும் அமெரிக்காவுக்கு - குறிப்பாக அதிபர் புஷ்ஷுக்கு - ஏற்பட்டுள்ளது.

புஷ் பதவியேற்ற பின்னர் பல விடயங்களில் அமெரிக்கா பின்னடைவுகளையும், சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பு மற்றும் கண்டனத்தை எதிர்கொள்ளும் நிலைமையும் உருவாகின.

சூழலை மாசடையச் செய்யும் வாயுக்களை வெளியிடும் தொழிற்சாலைகள் அமெரிக்காவிலேயே அதிகம் உள்ளதாகக் கருதப்படும் நிலையில், அந்த வாயுக்களைக் கட்டுப்படுத்தும் சர்வதேச ஒப்பந்தத்துக்கு ஒத்துழைக்க மறுத்ததும் -

ஐநா. மனித உரிமைகள் ஆணையகத்தின் உறுப்பினராவதற்கான தேர்தலில் அமெரிக்கா தோல்வியடைந்த போது, ஐநாவுக்குச் செலுத்த வேண்டிய கடனை கொடுக்கப்போவதில்லை என்று பழிவாங்கும் போக்கில் அறிவித்ததும் -

சமீபத்தில் நடந்து முடிந்த இனவாதத்துக்கு எதிரான ஐநா. மாநாட்டில், பலஸ்தீனருக்கு எதிராக இஸ்ரேலின் நடவடிக்கைகளால் அதனை இனவாத நாடாக அறிவிக்கும் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இஸ்ரேலுக்கு ஆதரவாக மாநாட்டைப் புறக்கணித்தும் -



ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்

ஏவுகணை எதிர்ப்புத் திட்டத்தை சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பை மீறி செயற்படுத்துவதும் -

ஐநாசபையில் தனக்குள் 'வீட்டோ' அதிகாரத்தை சுயநலநோக்கோடு பயன்படுத்துவதும் -





உலக அரங்கில் அமெரிக்கா மீது ஒருவித கசப்புணர்வைத் தோற்றுவித்திருந்தன.

இன விடுதலைப் போராட்டங்களை வன்முறை கொண்டு அடக்க முயற்சிக்கும் ஆதரவு நாடுகள் மற்றும் தீவிரவாத இயக்கங்களுக்கு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் உதவிகளை அள்ளி வழங்குவது



பிடல் காஸ்ட்ரோ

அமெரிக்கா மீது வெறுப்பை உருவாக்கியிருந்தது.

சர்வதேச மட்டத்தில் இத்தகைய எதிர்ப்புகளை அமெரிக்காவுக்கு எதிராக புஷ்ஷின் முடிவுகள் உருவாக்கியிருந்தன.

இந்த நிலையில் விமானத் தற்கொலைத் தாக்குதல்களின் பின் விளைவுகளை அமெரிக்கா எதிர்கொண்டுள்ளது.

உலகில் பாதுகாப்பு மற்றும் இராணுவத் தொழில் நுட்பத்தில் ஜாம்பவானாகத் தன்னை அமெரிக்கா பறைசாற்றிக் கொண்டது.

ஆனால் பயணிகள் விமானங்களைக் கடத்தி, அமெரிக்க முதலாளித்துவத்தின் சின்னங்களாகக் கருதப்படும் இலக்குகளின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தடுக்க முடியாமல் கோட்டைவிட்டுள்ளது அமெரிக்கா.

இதனால் பாதுகாப்பு தொழில்நுட்பச் சாதனங்களின் செயற்பாடு மீது சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே அவற்றின் மதிப்பு ஆயுத சந்தையில் கேள்விக் குறியாகக்கூடும்.

உலகில் சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ள நாடு எனக் கருதப்பட்ட அமெரிக்காவில், தற்போதைய நிலை ஏற்படுத்திய நம்பிக்கையீனத்தை - பாதுகாப்பு அச்சுறுத்தலை - நீக்க புஷ் நிர்வாகம் பிரயத்தனப்படவேண்டியிருக்கும்.

அதைவிட அமெரிக்கா கவலை கொள்ளும் வேறொரு விடயமும் உண்டு.

விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்ற சில மணித்தியாலங்களில் உலகெங்கும் அந்தச் செய்தி பரவிவிட்டது.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும், பலஸ்தீனப் பிரதேசமான மேற்குக்கரையிலும், லெபனானில் உள்ள பலஸ்தீன அகதிமுகாம்களிலும் ஈராக்கிலும் மக்கள் பெரும் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். மக்களிடையே நடமாடிய பலஸ்தீனத் தீவிரவாதிகள் ஆகாயத்தை நோக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

செய்தி பரவிய அடுத்த நிமிடமே மக்கள் மகிழ்ச்சியுடன் தெருக்களில் இறங்கி ஆர்ப்பரித்ததில் இருந்து, அமெரிக்கா மீது, அவர்களுக்கு இருந்த வெறுப்பை தன்னால் உணர முடிந்ததாக தொலைக்காட்சிச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

விமானத் தற்கொலைத் தாக்குதலையடுத்து -பெயர் குறிப்பிடப்படாத பலநாடுகளிலும் இணையத் தளச் செய்தி நிவனமொன்று நடத்திய ஆய்வில், இத்தனை ஆயிரம் பேர் உயிரிழந்ததால் ஏற்படும் சோகத்தை விட, அமெரிக்காவின் வல்லமைக்குக் கிடைத்த பேரிடி குறித்து உருவான மகிழ்ச்சி மக்களிடம் அதிகமாக இருந்தது தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் வீழ்ச்சியில் மகிழ்ச்சி கொள்பவர்களே அதிகம் என்பது இதிலிருந்து தெரியவந்துள்ளதாக அந்த இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது.

உலகரீதியாக அமெரிக்கா ஏற்படுத்திருந்த ஒருவித அச்ச உணர்வை விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் அகற்றியுள்ளதாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவுக்கு எதிராக, அமெரிக்காவில் தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதென்ற மாயத் தோற்றம் அகன்றுள்ளது.

அதைவிட, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அச்சப்படுவது, அமெரிக்காவுக்கு எதிரான தீவிரவாதிகள் மனரீதியாகப் பெற்றுள்ள வலிமை.

குறிப்பாக இஸ்லாமியத் தீவிரவாதிகள் மனோவியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வலிமை பெற இந்தத் தாக்குதல் சம்பவங்களைப் பயன்படுத்துவார்கள்.

விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்ற உடனேயே - அனைவரும் எதிர்பார்த்தபடி - இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் பக்கமே அதிபர் புஷ் உட்பட அமெரிக்க அரசின் பார்வை திரும்பியது.

இரு மாதங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் செய்தியாளர் ஒருவருக்குத் தனது மறைவிடத்தில் வைத்து வழங்கிய பேட்டியில் -

எவரும் எதிர்பாராத வகையில் அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்போவதாகப் பின்லேடன் அறைகூவல் விடுத்திருந்தார். அமெரிக்காவில் பின்லேடன் எதுவுமே செய்ய முடியாது என்ற அசாத்திய நம்பிக்கையில் அப்போது, மற்றைய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் உட்படத் தனது நிலைகளின் பாதுகாப்பையே அமெரிக்கா வலுப்படுத்தியது.

ஆனால் இறுதியில் தமது பொருளாதார வளர்ச்சி, இராணுவ வலிமை ஆகியவற்றின் குறியீடுகளாகக் கருதப்படும் இலக்குகள் மீதே தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்கர்கள் மட்டுமல்ல வேறு எவருமே எதிர்பார்க்கவில்லை.

சந்தர்ப்ப சூழ்நிலைகள், விமானத் தற்கொலைத் தாக்குதலுக்கு பின்லேடனைக் காரணியாகக் காட்டினாலும் அமெரிக்காவை எட்டிக்காயாக வெறுக்கும் வேறு சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அமெரிக்க புலனாய்வுத் துறையின் பல கொலை முயற்சிகளிலிருந்து தப்பியதாகக் கூறப்படும் கியூப அதிபர் பிடல் காஸ்ட்ரோ, இஸ்லாமியத் தீவிரவாதிகளின் புகலிடம் எனக் கருதப்படும் லிபியாவின் அதிபர் கடாபி, இன்றும் அமெரிக்க வான் தாக்குதலை எதிர்கொள்ளும் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான இஸ்ரேலின் அடக்குமுறைகளுக்கு ஆளாகியுள்ள பலஸ்தீனத் தீவிரவாதிகள், இப்படிப் பலர் மீதும், விமானத் தற்கொலைத் தாக்குதலின் பின்னணியில் இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

இதன் பின்னணியில் யார் இருந்தாலும், தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்ட விமானங்கள் கடத்தப்பட்டது, தாக்குதல் நடத்தப்பட்டதும், வியப்பையே தோற்றுவிக்கிறது.

வெறும் கத்திகளைக் காட்டியே விமானங்கள் கடத்தப்பட்டதாக முதற்கட்ட அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை.

ஆனால், பாதுகாப்பு நிறைந்த அமெரிக்காவின் விமான நிலையங்களிலிருந்து கிளம்பிய விமானங்களில் ஆயுதங்களுடன் ஏறி-

விமானிகள் விமான நிலையங்களை உஷார்படுத்தாத வகையில் விமானங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து -

அமெரிக்க வான் பரப்பில் தாம் விரும்பிய திசையில் விமானங்களைச் செலுத்தி - அதுவும் தாழப் பறந்து சென்று -



சதாம் ஹுசைன்

இலக்குகளைச் சரியாகத் தாக்கி அமெரிக்காவை மட்டுமன்றி உலகையே அதிரவைத்த இந்த விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்குக் காரணமானவர் வெளிப்படுத்தப்படும்போது அமெரிக்காவுக்கு எதிரான சக்திகளால் தலைமை ஏற்கும் ஒரு சக்தியாக அவர் உயர்த்தப்படுவார் என்பது நிச்சயம்.

அமெரிக்க அரசும் இது குறித்தே அதிகம் கவலைப்படுகிறது.

**- பாமரன் -**

இதனால்தான் விமானத் தற்கொலைத் தாக்குதல்களின் பின்னர் தேசியத் தொலைக்காட்சியில் - இறுகிய - இருண்ட முகத்துடன் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அமெரிக்க அதிபர் புஷ் -

இந்தக் கொடூரச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்றும் -

தாக்குதலை நடத்தக் காரணமானவர்களும், அவர்களுக்கு அடைக்கலம் தருபவர்களும் மிகவும் வருந்த நேரிடும் என்றும் -

எச்சரிக்கைத் தொனியில் கூறினார்.

சவூதிஅரேபியக் கோடீஸ்வரரான ஒஸாமா பின்லேடனையும், அவருக்கு அடைக்கலம் வழங்கியுள்ளதாகக் கூறப்படும் ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான் இயக்கத்தினரையும் மனதில் வைத்துக்கொண்டே புஷ் அந்த எச்சரிக்கையை விடுத்தது அனைவருக்கும் புரிந்தது.

தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடும்.

தற்போதைய ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# உலகவங்கியின் உதவி குறித்தா அரசுடன் புலிகள் பேசுவது?

## ஜே. வி. பியின் நிலைப்பாடு குறித்து தமிழ்ப் பிரமுகர்கள்

கொழும்பு, செப். 13

தமிழீழக் கோரிக்கையை விடுதலைப்புலிகள் கைவிட்டு வந்தாலும் அவர்களுடன் இடம்பெறும் பேச்சுக்களில் அதிகாரப்பகிர்வைப் பற்றிப் பேசக்கூடாது என்று நிபந்தனை விதித்திருக்கிறது ஜே.வி.பி. அப்படியானால் அதிகாரப் பகிர்வைப் பற்றிப் பேசாமல் இடைக்கால ஐந்து ஆணைக் குழு அமைத்தல், உலகவங்கியின் உதவி போன்ற விடயங்களைப் பற்றியா புலிகளுடன் பேசுவது?

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் மனோ கணேசன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கலாநிதி குமரகுருபரன் ஆகியோர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதுதொடர்பாக ஜே.வி.பியின் தலைவர்களுக்கு அவர்கள் விடுத்துள்ள பகிரங்கக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழக் கோரிக்கை கைவிடப்படும் நிபந்தனை நிறைவேற்றப்படாமல் அரசு பேச்சுக்குச்சென்று அதிகாரப் பகிர்வு முயற்சிகளில் ஈடுபட்டால் அதைக் கடுமையாக எதிர்ப்போம் என்று கூறும் நீங்கள் அப்படியான உத்தேசப் பேச்சில் இலங்கை அரசு விடுதலைப் புலிகளிடம் எந்த விடயங்களைப்பற்றிப் பேச வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? அரசமைப்பின் உத்தேச பதினேழாம் திருத்தத்தைப்பற்றியும், பெரிதாகப் பேசப்படும் ஐந்து சுயாதீன ஆணைக்குழுக்களைப் பற்றியும், உலகவங்கியிடம் இலங்கை அரசு கடன் பெறுவதைப்பற்றியும், தனியாராமயமாக்கலைப பற்றியும் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் பேசவேண்டும் என்பது உங்களது எதிர்பார்ப்பா என்று தமிழ் மக்களின் சார்பாக கேட்க விரும்புகின்றோம்.

தமிழ் மக்களின் நிகழ்ச்சி நிரலிலே இன்று மேற்கண்ட விடயங்களுக்கு முதன்மை இடங்கள் இல்லை. போர் நிறுத்தம், சர்வதேச மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம், அரசியல் தீர்விற்கான பேச்சு, வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு முழுமையானசுயாட்சி, வடகிழக்கிற்கு வெளியே மலைநாட்டிலும், மேல்மாகாணத்திலும் வாழும் தமிழ் மக்களுக்கு வடக்கு—கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கு அளிக்கப்படும் அதேவிதமான உரிமைகள் ஆகியவையே இன்று தமிழ் பேசும்மக்களின் பேச்சு நிகழ்ச்சி நிரலிலே முதன்மை இடம் வகிப்பவை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் செய்யப்பட்ட அனைத்து சாத்வீக முயற்சிகளும் தோல்வியடைந்த பின்னரும். அம் முயற்சிகள்கொடூரமானமுறையிலே அடக்கப்பட்டதன்பின்னரும்தான் தமிழர்கள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்பதை இந்நாட்டிலே இரண்டுமுறை ஆயுதம் தூக்கிய வன்முறை கிளர்ச்சிகளில் ஈடுபட்டு ஆயிரக்கணக்கனோரின் மரணத்திற்கு வழிவகுத்த உங்களது கட்சிக்கு புரியாதது விஷமத்தனமானதாகும்.

### ஜே. வி. பியின் மனப்பால்

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு இன்று நமது மக்கள் கொடுத்துள்ள விலை அளப்பரியது. தென்னிலங்கை பெரும்பான்மைக் கட்சிகளின் அரசியல் அதிகாரப்போட்டி சித்துவிளையாட்டுகளுக்கு தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பலியாக்க முயற்சிசெய்ய வேண்டாம். மத்திய அரசாங்க ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற தேவை தமிழ் மக்களுக்கு இல்லை. அதை தென்னிலங்கை பெரும்பான்மைக் கட்சிகள் தங்களுக்குள்ளேயே பகிர்ந்து கொள்ளலாம். ஆனால வடக்கு—கிழக்கு தமிழர்களுக்கும், மலையகத் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் உரிய நியாயமான பங்குகள் கொடுக்கப்படவேண்டும் என்று இன்று அரசியல் கட்சிகள், மத நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் தொழில் சார் அமைப்புகள் ஆகியவை மத்தியிலும் இலங்கையின்நலனில் அக்கறை கொண்டுள்ள சர்வதேசசமூகத்தின் மத்தியிலும் தோன்றிவரும் பொதுச் சிந்தனைக்கு எதிராக ஜே வி. பி. செயற்படுவதை தமிழ் பேசும் மக்கள் அங்கீகரிக்க மாட்டார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றித் தெரியாத சில தமிழர்களையும், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைப் பற்றியே தெரியாத சில முஸ்லிம்களையும் உங்களது கட்சிக்குள்ளும், மக்கள் சபைகளிலும் நியமித்துக் கொண்டிருப்பதால், தமிழ் — முஸ்லிம் மக்கள் உங்களது கட்சியை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று தயவுசெய்து மனப்பால் குடிக்க வேண்டாம்.

### — தார்மீக உரிமை ஜே.வி.பிக்குகிலடயாது

உங்களது கட்சி நாட்டின் ஆட்சியைப் பிடித்துச் சமதர்ம அரசாங்கத்தை அமைக்கும் வேளையிலேயே, அதிகாரப் பிரிவினைக்கு உடன்பட முடியும் என்றும் இன்றைய நிலைமையில் ஒற்றையாட்சி அரசின் கீழ்ப்பட்ட அரச பரிபாலன நிர்வாக ரீதியான அதிகாரப்பரவலாக்கலைத்தான் உங்களது கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது என மேல் மாகாண சபையின் உங்கள் கட்சி குழுத்தலைவர் பியசிறி விஜேநாயக்க கூறியுள்ளார். இன்றைய மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்திற்கு வெளியே இந்த அரச நிர்வாக அதிகாரப் பரவலாக்கல் செல்லாது என்பது உங்கள் கட்சியின் கொள்கை எனத் தெரிகின்றது.

இன்றைய சிங்கள, பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களைக் கொன்று ஒழிக்கின்றது, அல்லது நாட்டை விட்டுத் துரத்துகின்றது அல்லது தமிழ் இனத்தின் தனித்துவ கலாசாரத்தை அழித்து அவர்களை அப்படியே சிங்களவர்களாக இனமாற்றம் செய்கின்றது. இந் நிலையில் இன்னும் பல பத்தாண்டுகள் கழித்து உங்களது கட்சி இந் நாட்டின் ஆட்சியைப் பிடித்து சமதர்ம சமூகத்தை அமைக்கும் போது இந்நாட்டிலே உங்களது சமதர்ம நல்லாட்சியை அனுபவிக்கத் தமிழ்மக்கள் வாழமாட்டார்கள்என்று உங்களுக்குப் புரியவில்லையா?

தமிழ் மக்கள் இன்று எதிர்பார்த்து நிற்பது ஒரு கூட்டாட்சி அரசமைப்பின் கீழ் தமது பாரம்பரிய வடக்கு — கிழக்கு தாயகத்தில் பூரணமான சுயாட்சியையும், அதே வேளையில் வடக்கு—கிழக்கு மாநிலத்திற்கு உட்பட பிரதேசத்தில் வாழக்கூடிய சிங்கள மக்களுக்கு அளிக்கப்படும் மொழி, கலாசார மற்றும் அனைத்து உரிமைகளுக்கும் சமமான உரிமைகள் மலைநாட்டிலும், மேல் மாகாணத்திலும் வாழக்கூடிய தமிழ்மக்களுக்கும்வழங்கப்பட வேண்டும் என்பவற்றையே. இதை ஏற்றுக்கொள்ளாதவரைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தமிழீழக் கோரிக்கைகளை கைவிடும்படி நிபந்தனை விதிப்பதற்கு உங்களது கட்சிக்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் இல்லை. — என்றுள்ளது

(ஐ-3)

## நிவாரணத்தை இரட்டிப்பாக்க கோரிக்கை

தென்மராட்சி, செப். 12

கடல் வலயத் தடையினால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர் குடும்பங்களுக்கு இரட்டிப்பு நிவாரணம் வழங்குமாறு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோரை வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினர் கோரியுள்ளனர்.

தமது அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கு நிவாரணத்தின் ஒரு பகுதியினை பணமாக வழங்குமாறும் அவர்கள் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கிடையில் தனித்தனியாகச் சுற்றுப் போட்டிகளை நடத்தவிருக்கின்றது.

பாடசாலைகளின் 17 வயதுக்குட்பட்ட — ஆண், பெண் அணிகளுக்கு இடையிலும்—

கழகங்களின் 21 வயதுக் குட்பட்ட ஆண், பெண் அணிகளுக்கு இடையிலும் —

இந்தச் சுற்றுப் போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவிரும்பும் பாடசாலைகள், கழகங்கள் எதிர் வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளன. (ஐ-3)

## சாரணருக்கான கலைக்கூறு பயிற்சி நெறி

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினால் சாரணர், குருளைச் சாரணர்களுக்கான கலைக்கூறு இரண்டு பயிற்சிகள் இம் மாதம் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற உள்ளன.

1998 ஆம் ஆண்டு கலைக்கூறு இரண்டில்கலந்துகொண்டவர்களும் இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள வேண்டும் என்று காங்கேசன்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் ந. சௌந்தரராயன் அறிவித்துள்ளார். (ம-152)

## சீருடை விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஜி. சி. ஈ. (உயர்தர) வகுப்பின் 2000, 2001 ஆம் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாணவர்கள் நாளை வெள்ளிக்கிழமை வரை சீருடைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-3)

## வடக்கு - கிழக்கு பாடசாலைகளின் கையெழுத்துச் சஞ்சிகை போட்டி முடிவு வெளியானது

வலிகாமம் தெற்கு, செப். 13

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் 1999ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றிபெற்ற சஞ்சிகைகளுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சினால் விரைவில் திருகோணமலையில் நடத்தப்பட உள்ள தமிழ் இலக்கிய விழா நிகழ்வுகளின் போது வழங்கப்படும். விழா நடைபெறும் காலமும், இடமும் பின்னர் அறிவிக்கப்படும் என்று வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ. சிவானந்தன் அறிவித்துள்ளார்.

பரிசுபெறும் சஞ்சிகைகளும், அவற்றைத் தயாரித்த பாடசாலைகளும் வருமாறு:-

### பாலர் கீழ்ப்பிரிவு

★ முதலாம் இடம் — 'வண்ணச்சோலை' — தருமபுரம் அ. த. க. பா.

★ 2ஆம் இடம் — 'விடிவு' — சம்மாந்துறை அல். அஷ்ர் வித்தி.

★ 3 ஆம் இடம் — 'வாழ்வு தந்தோர்' — கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி.

### பாலர் மேற்பிரிவு

★ முதலாம் இடம் — 'பூந்தளிர்' — கிளிநொச்சி பிரமந்தவாறு மகா வித்தியாலயம்.

★ 2 ஆம் இடம் — 'தமிழருவி' — நயினாதிவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம்.

★ 3ஆம் இடம்— 'முனை' — புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி.

### இடை நிலைப் பிரிவு I

★ முதலாம் இடம் — 'வேலை உலகு' — கல்முனை பாத்திமா கல்லூரி.

★ 2 ஆம் இடம் — 'வளர் பிறை' — கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.

★ 3ஆம் இடம் — 'பத்திரிசியம்' — யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.

### இடை நிலைப் பிரிவு II

★ முதலாம் இடம் — 'சுரங்கம்' — திருமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி.

★ 2 ஆம் இடம் — 'தகவல்' — விசுவமடு பாரதி வித்தியாலயம்.

★ 3 ஆம் இடம் — 'தமிழாரம்' கொக்குவில் இந்துக் கல்லூரி. 'பொதிகை' — சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

### இடை நிலைப் பிரிவு III

★ முதலாம் இடம் — 'மூன்றாவது பாதம்' — கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி.

★ 2 ஆம் இடம் — 'அருங்கதிர்' — கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அ. த. க. பாடசாலை.

★ 3 ஆம் இடம் — 'தாரகை' — அக்கரைப்பற்று முஸ்லிம் மகளிர் கல்லூரி.

### கல்லூரி நிலைப் பிரிவு

★ முதலாம் இடம் — 'விபுலம்' — திருமலை — ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி.

★ 2 ஆம் இடம் — 'சுருதி' கல்லடி விவேகானந்தா ம. ம. வித். மட்டக்களப்பு.

★ 3 ஆம் இடம் — 'விழி' — மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.

(ஐ-152)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 13

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் திக்கமுனை மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி — உதயதாரகை 'பி' அணி எதிர் கலைமதி 'ஏ' அணி.

★ மாலை 4.30 மணி — ஆதிசக்தி அணி எதிர் கலைவாணி 'பி' அணி.

(ஐ-152)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வல்லிபுரம் அப்பாத்துரை**

(முன்னாள் பிரதி அதிபர், யா/ விமன்காமம் மகா வித்தியாலயம், தெல்லிப்பழை)

தோற்றம் 11-09-1935 மறைவு 05-09-1999

அன்புகாட்டி, அறிவு ஊட்டி
அகிலம் போற்ற வளர்த்திட்ட தந்தையே!
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறாது உம் பிரிவுத்துயர்!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

'சத்தியவாசா' லவ் லேன், உடுவில்.

(92200)

உதயன்

## தாக்குதலின் தாக்கம்!

நேற்றுமுன்தினம் அமெரிக்காவில் நடத்தப்பட்ட மிக்மோசமான தற்கொலைத் தாக்குதல்கள் அமெரிக்காவை அதிரவைத்ததோடு முழு உலகையுமே வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றன.

உலகின் மிகப்பெரும் வல்லரசான அமெரிக்காவின் இரு பெரும் - பொருளாதார, இராணுவ - மையங்கள் மீது இத்துணிகரத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

உலகின் அதி உயர்ந்த பாதுகாப்பு மையங்களில் மிகமுக்கியமானது பென்டகன். முழு அமெரிக்காவினதும பாதுகாப்பு இதயம் அதுதான். அதன் மீது கூட மிக இலகுவாக, மிகப்பெரும் தாக்குதலை நடத்தி, அந்தப் பாதுகாப்பு மையத்தில் கடமையிலிருந்த எண்ணூறு பேரைக் காவு கொண்டு, பென்டகனின் பாதுகாப்பு ஏற்பாடுகளையே சிதறடித்திருக்கின்றது இத்தாக்குதல்.

உலகிலேயே மிகவலுவான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட நாடு என்று கருதப்படுவது அமெரிக்கா. அதன் உயர் பாதுகாப்பு மையத்துக்குள் - கண்ணுக்குள் விரலைவிட்டு ஆட்டுவது போல - தாக்குதலை நடத்தியிருக்கின்றார்கள் அதை மேற்கொண்டவர்கள்.

இந்தத் தாக்குதல்களில் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பது மிகப் பரிதாபத்துக்கும் வேதனைக்கும் உரியதாகும்.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளெயர் கூறியது போல மனித உயிர்களை மதிக்கத் தெரியாதவர்களின் செயல் இது என்பது தப்பில்லைத்தான்.

யாருடைய தவறுக்காகவோ அப்பாவிகள் ஆயிரக் கணக்கில் பலியாகியிருப்பதும் கவலைக்கும் வேதனைக்கும் உரியதுதான்.

இத்தகைய கோர சம்பவங்கள் மனித வரலாற்றில் என்றுமே நிகழக்கூடாதவைதான்.

ஆனாலும் -

இப்படியான கோர சம்பவத்தின் பின்னரும் கூட, இத்தாக்குதல்களைக் கைகொட்டி வரவேற்று, ஆரவாரித்து மகிழும் ஒரு நிலையில் உலகின் அரைவாசிப் பங்கு மக்கள் இருப்பதையும் நாம் இங்கு மறந்துவிடக் கூடாது.

பலநாட்டு மக்களும் தலைவர்களும் உதட்டளவில் இத்தாக்குதல்களைக் கண்டித்தாலும் கூட, உள்ளூர மகிழ்கின்றார்கள் என்ற யதார்த்தத்தை நாம் ஒதுக்கிவிட முடியாது.

இத்தகைய கொடூரத் தாக்குதலை மனித சமூகத்தின் ஒருபகுதி வரவேற்பதற்கான காரணத்தை, அமெரிக்க, பிரிட்டன் மற்றும் நேசநாடுகளின் மொழியில் வெறும் "பயங்கரவாதம்" என்று கூறி ஒதுக்கிவிட முடியாது; ஒதுக்கி விடவும் கூடாது.

வியட்நாமில் அமெரிக்கா கையைச் சுட்டுக் கொண்டபோது, வியட்நாமிலிருந்து அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையை வெளியேற வைத்தவர்கள் அமெரிக்க நாட்டு மக்களே. அப்போது பயங்கரவாதிகள் யார் என்பதை அமெரிக்க மக்கள் அடையாளம் கண்டு கொண்டதால், வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலை உணரப்பட்டது.

இன்றும் நிலைமை அதுதான். உலகின் பொலீஸ்காரன் - சர்வதேச காவலன் - தான் என்று நினைத்துக் கொண்டு அமெரிக்கா செய்யும் அட்டூழியம், ஆக்கிரமிப்பு, அத்துமீறல் என்பவையும் -

பல்வேறு இன மக்களின் சுய இருப்புக்கான போராட்டங்களை பயங்கரவாதம் என்று கூறி, தன் எல்லை மீறி அவற்றை அடக்கத் துள்ளி எழுவதும் -

தன் சார்பான - இஸ்ரேல் போன்ற - நாடுகளின் 'பயங்கரவாத' செயல்களை வலிந்து நியாயப்படுத்தி நடந்து கொள்வதும் -

சர்வதேச ரீதியில் அமெரிக்காவின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பையும், நேற்றுமுன்தினம் நடந்த தாக்குதல்கள் போன்றவற்றுக்கு நியாயம் கற்பிக்கும் போக்கையும் தருகின்றன என்பதை அமெரிக்க மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தாக்குதல்களுக்குக் காரணமானவர்களைத் தேடிக் கண்டு பிடித்து தண்டிப்பதில் அமெரிக்க நிர்வாகம் காட்டும் அதே வேகத்தையும், ஈடுபாட்டையும் -

அடுத்த நாட்டு - இன - மக்களின் விவகாரங்களில் அத்துமீறி அமெரிக்கா தலையிடுவதைத் தடுப்பதிலும் - வியட்நாம் விவகாரத்தில் காட்டியதுபோல - அமெரிக்க மக்கள் காட்ட வேண்டும். அப்போதுதான் அமெரிக்க மக்களும், ஏனைய நாடுகளின் - இனங்களின் - மக்களும் அமைதியாகவும், நீதி கிடைக்கப் பெற்றவர்களாகவும் வாழ முடியும்.

# யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்ட வர்த்தகர் ஆஸ்பத்திரியில் அனுமதி

## விலங்கு போட வேண்டாமென உத்தரவு

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்த்தகரான மகேந்திரநாதன் சங்கர் கடந்த திங்களன்று சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ். நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில், சட்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கமையவே இவர் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பெற்று வருகின்ற வேளையில், இவருக்கு கை, கால் ஆகியவற்றில் விலங்கு மாட்டக்கூடாது என்று சட்ட வைத்திய அதிகாரியினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தபோதும், பாதுகாப்புக் காரணங்களுக்காக விலங்கு மாட்டப்பட வேண்டும் என்று சிறைச்சாலை நிர்வாகம் நீதிமன்றில் தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக குறிப்பிட்ட நபரின் பாதுகாப்புக் குறித்து நீதிமன்றுக்கு போதிய அக்கறை உள்ள போதும் 3 பொலீஸாரும் ஒரு சிறைச்சாலை உத்தியோகத்தரும் அவரின் பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்டுள்ளதால் அவக்கு விலங்கு மாட்டத் தேவையில்லை என்று நீதிவான் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு உத்தரவிட்டார். (க-10-ரி)

## விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு,செப்.13

கொழும்பு - ஹபரனை வீதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தனியார் பஸ் - இராணுவ 'ட்ரக்' விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த பிக்கு ஒருவர் உயிரிழந்தார்; மற்றும் ஐந்து பயணிகள் காயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்கள் ஹபரனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-3-4)

## மேன்முறையீடு செய்ய வசதி

யாழ்ப்பாணம்,செப்.13

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் அண்மையில் நூலகர் தரம் 3 இற்கு நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்களையும், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களையும் மேன்முறையீடு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது.

தமது கல்வித் தகைமை, சேவைக் காலம் ஆகியவற்றின் விவரங்களுடன் மேன்முறையீட்டை நூலகர் ஒன்றியத்தின் செயலாளருக்கு அனுப்பும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை பொது நூலகத்தில் நூலகர் ஒன்றியம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## நாட்டு நடப்பு

### உண்டி - II

கூழதை மறந்தே போனோம்
குரக்கனைக் கைவிட்டு விட்டோம்
வளமான பழைய சோற்றை
வயிறாற உண்ணாது விட்டோம்
ஒடியலை வரகை பனாட்டை
ஒருநாளும் கண்டறியோம்
இடியப்பம் சொதியும் சேர்த்து
இட்டமாய் உண்டதாலே
அடிபட்டு கியூவில் நின்று
அரைக் கொத்து குளிசை வாங்குகிறோமே!

- விகடகவி.

# நாடும், மக்களும் அழிந்து கொண்டிருக்க ஜனாதிபதி பதவிமோகத்தில் இருக்கிறார்

## சந்திரசேகரன் எம்.பி. சொல்கிறார்

கொழும்பு,செப்.13

யுத்தத்தின் கொடுமையால் நாடே சீரழிந்து கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய ஜனாதிபதி இவை பற்றிச் சிந்திக்காமல் பதவிமோகத்தில் மூழ்கிக் கிடக்கிறார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

உடப்புசலாவ பகுதி தோட்டத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஜே.வி.பியினர் உண்மையான மக்கள் பிரதிநிதிகளாக இருந்திருந்தால், இந்த நாட்டில் எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நிபந்தனைகளை அரசாங்கத்திற்கு முன்வைத்திருக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்துக் கொண்டிருக்கும் யுத்தத்தை நிறுத்துவது பற்றிய நிபந்தனைகளை முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் சிறியகட்சிகளின் தயவில் அரசாங்கங்கள் தங்கியிருக்கக் கூடாது என்ற ஜனாதிபதியின் ஆசைகளுக்குத் துணை போவதாகவே இவர்களின் செயல் அமைந்துள்ளது.


தோட்டத் தொழிலாளர்களாகவும், எந்தவித அடிப்படை உரிமைகளும் இல்லாதவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி ஒரு வேலைத்திட்டத்தை முன்வைக்கும் தேவையைக் கூட ஜே.வி.பியினர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்த சூழ்நிலையில் நாம் வெறும வாய்மூடி மௌனியாக இருந்து, சிறுபான்மை மக்களுக்குத் துரோகம் இழைக்கக் கூடாது என்ற காரணத்தினால்தான் ஜே.வி.பி. - பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டை எதிர்க்கின்றோம்.

மலையகத்தின் மற்ற அமைப்புகள் எல்லாம் அமைதியாக இருக்கின்றன என்பதற்காக மலையக மக்கள் முன்னணியும் அமைதியாக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை.

யார் அரசு அமைத்தால் என்ன என்ற அலட்சியப் போக்கிலும் மக்களை வழிநடத்தும் நிலையிலும் நாம் இல்லை. எமது மக்களுக்கு அநீதிகள் எங்கிருந்து, எந்த ரூபத்தில் வந்தாலும் அதனை எதிர்ப்பதோடு மட்டுமல்லாமல் அதனால் ஏற்படும் அபாயத்தையும் மலையக மக்கள் முன்னணி மக்களுக்கு வெளிப்படுத்தத் தயங்காது - என்று தெரிவித்தார். (ஐ)

## சாயி சிந்தனை



### கடவுளிடம் செல்லும் பாதை

ஒவ்வொருவரின் தலைமேல் உள்ளது ஒரே ஆகாயம்தான்! ஒவ்வொருவரின் பாதங்களின் கீழ் உள்ளது ஒரே பூமிதான்! எல்லோரும் சுவாசிப்பது ஒரே காற்று! எதற்கு ஒருவர் மேல் ஒருவருக்கு துவேஷமும் வெறுப்பும்? எதற்காக உங்களுக்கிடையே இத்தனை வேறுபாடு? உண்மையை மறந்துவிட்டதால்தான் மனிதர்களுக்கிடையே மனிதத்தன்மை மாறிப்போய், மிருகத்தன்மை குடிகொள்கிறது. மனிதனுக்குத் தேவை அன்பு மட்டும்தான். அதுதான் அவனுக்கு ஜீவசக்தி. ஆனால் இந்த அன்பு மறந்துபோய்விடுகிறது. ஆகையால் அனைவரையும் நேசிக்கவேண்டும். இதுவே உங்களைக் கடவுளிடம் அழைத்துச்செல்லும் ராஜபாதை.

*(சனாதன சாரதி மார்ச் 1995)*

## திவ்வியன் கைது விவகாரம்:

# ஆயுதங்களை பகுப்பாய்வு செய்து அறிக்கையை சமர்ப்பிக்க உத்தரவு

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனிடம் இருந்து மீட்டதாகத் தெரிவித்து நீதிமன்றில் சமர்ப்பித்த ஆயுதங்களை இராசயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி எதிர் வரும் 25 ஆம் திகதி நீதிமன்றில் அறிக்கையை சமர்ப்பிக்கும்படி கண்டிப்பான உத்தரவைப் பொலீஸாருக்கு யாழ். நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா விடுத்தார்.

யாழ். நீதிமன்றில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற திவ்வியன் தொடர்பான வழக்கின் விசாரணையின்போது, காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு சப்இன்ஸ்பெக்டர் கருணசேன வாக்குமூலம் அளித்தார்.

குறிப்பிட்ட ஆயுதங்களை இராசயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த முடியாத நிலை குறித்து அவர் விளக்கம் அளித்தார்.

ஆயுதங்களை இரசாயனப் பகுப்பாய்வு செய்ய கொழும்பில் இருந்து பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வரமுடியாத நிலை உள்ளதாகவும் -

ஆயுதங்களின் மாதிரிப் படங்களை அனுப்பினால் பரிசோதனை செய்து அறிக்கை அனுப்ப முடியும் என்று தகவல் தரப்பட்டுள்ளது என்றும் - அவர் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

இந்தக் காரணங்களை ஏற்கமுடியாது என்று தெரிவித்த நீதிவான், எந்த வகையிலாவது ஆயுதங்களை பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கையை எதிர்வரும் 25ஆம் திகதி சமர்ப்பிக்கும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை -

யாழ். பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உயர் நீதிமன்றினால் சட்ட வைத்திய அதிகாரிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-3-10-ரி)

## நாளை

ஆவணி 29
வெள்ளிக்கிழமை
திதி: துவாதசி
நள்ளிரவு 12.03 வரை.
நட்சத்திரம் : பூசம்
பிற்பகல் 3.34 வரை.
சுபநேரம்: 6.03 - 7.33
ராகுகாலம் : 10.33 - 12.03
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

....பெரும் செல்வமும் திருப்தியும் ஒன்றி வாழ்வதில்லை....

# கல்வி அதிகாரிகளுக்கான கூட்டம் திருகோணமலையில்

குருநகர்,செப்.13

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களில் கடமைபுரியும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள் ஆகியோருக்கான கல்வி அபிவிருத்திக் குழுக்கூட்டம் இம்மாதம் 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் திருகோண மலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முகாமைத்துவ மண்டபத்தில் தினமும் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணிவரை நடைபெறவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் க.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

வலயக்கல்வி அலுவலகங்களின் கீழ் உள்ள பாடசாலைகளின் காணி கொள்வனவும், காணி அபிவிருத்தி, மாணவர் புலமைப் பரிசில் கொடுப்பனவு, பாடசாலைக் கட்டடம், பாடசாலைத் தளபாடம், பாடசாலை உபகரணம், பாடசாலை ஆளணி விவரம், பாடசாலை ஆசிரியர் இடமாற்றங்கள், ஆசிரியர் பதவி உயர்வு, புதிய பாடசாலை ஆரம்பித்தல், பாடசாலை தரம் உயர்த்துதல் ஆகிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகவும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளுடன் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர்களை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் கேட்டுள்ளார்.(ஐ-15)


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆங்கில வகுப்புகள்

மீண்டும் ஆரம்பம் ஆங்கில இலக்கியம் year 10&11, ஆங்கில பாஷை (all Grades) இலக்கண வகுப்புகள், பொது ஆங்கிலம் A/L அனுபவமுள்ள லண்டன் பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். தொடர்பு: 112, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (92185)

## தவறிவிட்டது

பெண்களுக்கான பெறுமதிமிக்க கைக்கடிகாரம் ஒன்று ஞானபண்டித பாடசாலை வீதியில் இருந்து ஆடிய பாதம் வீதியூடாக பொற்பதி வீதிக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.457, பிரகாஸ் ஏஜன்சி, சிவன்கோயிலடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (92197)

நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த பொன்னுச்சாமி சிறிதரன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 761434241V), விசேட அ.அட்டை (இல. 09030654) என்பன நல்லூருக்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒளியருவி, நல்லூர் அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.(92212)

இராசையா இராசரூபனின் தே.அ.அ. (இல.742172333V), வி.அ.அ. (இல. 0903033559) என்பன ஆவரங்கால் சந்திக்கும் வல்லைச்சந்திக்கும் இடையில் 30.05.2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராசையா இராசரூபன், சர்வோதயா வீதி, ஆவரங்கால் மேற்கு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (92229)

## விற்பனைக்கு

சகல வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: H.L.G. கொன்ஸ்ரன்ரைன், இல.873, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (92227)

## புறொயிலர் குஞ்சுகள்

சேலான் இன புறொயிலர் குஞ்சுகளும், சமிறா இன கறுப்பு, சிவப்பு நிற பேட்டுக் குஞ்சுகளும் உடன் பெற்றுக்கொள்ளலாம். விலை குறைக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர் கவனிக்கவும். தொடர்பு: வி. குணபாகன், 343, கே.கே.எஸ். வீதி; 1014, கே.கே.எஸ். வீதி (பெரியுலம் பாடசாலைக்கு முன்பாக) T.P.3353 (92234)

## படிவம்

2003ஆம் ஆண்டுக்கான அமெரிக்க விசாப்படிவம் விற்பனையாகின்றது. விலை ரூபா 5/=. படிவமும் கடித உறையும் தபாலில் பெறுவதாயின் ரூபா 10/= அனுப்பவும். நாயகபாலன், மானிப்பாய். (92230)

## மாணவர் அணி கொழும்பு செல்லும்

யாழ்ப்பாணம்,செப்.13

மாகாணங்களுக்கு இடையிலான தேசிய மட்ட பாடசாலை மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள யாழ்.மாவட்ட மாணவர்கள் அணி எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை கப்பல் மூலம் திருகோணமலைக்குச் செல்லவுள்ளது.

இப்போட்டிகள் யாவும் எதிர்வரும் 27ஆம், 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் கொழும்பு, சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. (ஐ-10-ரி)

## விற்பனை நிலையம் திறப்பு

அரியாலை,செப்.13

பஜாஜ் மோட்டார் சைக்கிள் யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தராக நியமிக்கப்பட்ட யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஓட்டோ ஆகியவற்றிற்கான உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்றை யாழ்.நகரில் நேற்று புதன்கிழமை திறந்து வைத்துள்ளது.

கே.கே.எஸ். வீதியில் சத்திரச் சந்திக்கு அருகில் உள்ள மேற்படி சங்கத்தின் தலைமைக் காரியாலத்தின் கீழ்மாடி வர்த்தக நிலையப் பகுதியில் மேற்படி விற்பனை நிலையத்தைச் சங்கத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த விற்பனை நிலையத்தில் பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஓட்டோ ஆகியவற்றிற்கான உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யப்படும். (ஐ-17)

---



## சிறுவர் நாடாளுமன்றம்

சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம் 2001 செப்ரெம்பர் 16 முதல் 19 வரையான திகதிகளில் கொழும்பில் நடத்தவிருக்கும் சிறுவர்கள் நாடாளுமன்றம் மற்றும் ஆயத்தப் பயிற்சிப் பட்டறை ஆகியவற்றில் கலந்துகொள்வதற்காக திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்திலிருந்து **செல்வி சுவர்ணஜா சோமசுந்தரம்** அவர்களும் தெரிவு செய்யப்பட்டு இன்று (13-09-2001) வியாழன் கொழும்பு செல்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, சிறுவர் பாதுகாப்பு ஒன்றியத்துக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்,

*சைவ வித்தியா விருத்திச் சங்கம*

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(92231)

---

## பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை (வ-து)

## லொறி விற்பனைக்கான கேள்வி கோரல்

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான 40 ஸ்ரீ 2000 தொடர் இலக்கம் உடைய இசூசு லொறி கேள்விச சபையின் நிபந்தனைகளுக்கு அமைய கேள்வி கோரப்படுகின்றது. கேள்வி விண்ணப்பப்படிவங்களை மீளளிக்கக்கூடிய கேள்விப் பணமாக ரூபா 7,500/-ம், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் பணமாக ரூபா 250/-ம் செலுத்துவதன் பெயரில் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து 'தலைவர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம், பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில்' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ 24.09.2001ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் லொறி விற்பனைக்கான கேள்வி கோரல் எனக் குறிப்பிடல் வேண்டும்.

அன்றையதினமே பிற்பகல் 1.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கேள்வி திறத்தலின்போது சமுகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்களை சங்க அலுவலக நேரத்தில் 13.09.2001ஆம் திகதியிலிருந்து 21.09.2001ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிவரை கேள்விச் சபையின் நிபந்தனைகளுக்கு அமைவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

லொறியைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**பொது முகாமையாளர்.**

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்.
13.09.2001 (C/18244)

---

## கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்கைச் சேர்ந்தவரும் முன்னாள் பட்டினசபை உபதலைவரும் சமூக சேவையாளருமாகிய

**ஆசீர்வாதம் ஹென்றி**

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைவதாக!

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ
(ரெக்ஸ்ரைல்ஸ்)

*13,14, பெரிய கடை,*
*யாழ்ப்பாணம்.*

(92233)

---

## மரண அறிவித்தல்

## தவசி பிள்ளையார்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் அரசடியை வசிப்பிடமாகவும் கொண்ட தவசி பிள்ளையார் நேற்று (12-09-2001) புதன்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இராசாத்தியின் அன்புக் கணவரும், துரை, காலஞ்சென்ற யோகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சுப்பிரமணியம் (சுவிஸ்), சறோஜினிதேவி (சுவிஸ்), இராஜேஸ்வரி (சுவிஸ்), மாலினிதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மகாலிங்கம் (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), தணிகாசலம் (பிரான்ஸ்), மஞ்சுளா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-09-2001) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**மனைவி,**
**மாலினிதேவி (மகள்).**

*173/Γ, அரசடி வீதி,*
*முதலாவது ஒழுங்கை,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (92232)

---

## உளங்கனிந்த நல்வாழ்த்து



புகழ்பூத்த உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் மேற்படி கல்லூரியின் அதிபருமான

## திரு.அப்பாத்துரை ஈஸ்வரநாதன்

அவர்கள் முதலாந்தர அதிபராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு உரும்பிராய் இந்துவின் மைந்தர்களாகிய நாங்கள் அகம் மகிழுகின்றோம். அன்னவரின் கல்விச்சேவை மேலும் வளர்ச்சியுற உளங்கனிந்து வாழ்த்துகின்றோம்.

*இந்துக் கல்லூரி,*
*உரும்பிராய்.*

**பழைய மாணவர் சங்கம்.**

(92241)

---

## இடம்மாற்றம்

இல.3, முத்தவிநாயகர் கோயில் வீதி,
கச்சேரி நல்லூர் றோட் என்னும் முகவரியில் இயங்கிவந்த
*கமலக்கண்ணன் திருமண சேவை*
இன்று (13.09.2001) வியாழக்கிழமை தொடக்கம் **பருத்தித்துறை வீதி,** (முத்திரைச்சந்திக்கு அண்மையில்) **அம்பாள் சைவ உணவக மேல் மாடியில்** இயங்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

(92235) உரிமையாளர்.

---

**தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி வரணி** (மட்டுப்படுத்தப்பட்டது)

## கூறுவிலை கோரல்

எமது நிறுவனத்தின் உழவு இயந்திரப் பெட்டிக்கு **"டிப்பர் பம்"** பொருத்துவதற்கான கூறுவிலை கோரப்படுகிறது.

கோஸ் பைப் உட்பட பம்மின் வகை, விலை விவரம் என்பன்வற்றைத் தெளிவாக எழுதி '**தலைவர், தென மராட்சிக் கொத்தணி, புலோலி கிழக்கு, புலோலி**' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 25.09.2001 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.**

**- தலைவர்.**

*பருத்தித்துறை வீதி, வரணி.* (92239)

---

## கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் பட்டின சபையின் முன்னாள் உபதலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மானிப்பாய்த் தொகுதிக் கிளையின் உபதலைவருமான

**ஆசீர்வாதம் ஹென்றி** அவர்கள்

காலமானதை அறிந்து பெரும் துயரடைந்தோம். அன்னாரின் மறைவு எமக்கு பேரிழப்பாகும். அவரின் பாரியார் மற்றும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி,
மானிப்பாய்க் கிளை.

(92236)

---

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் கிராமசபையின் முன்னாள் உறுப்பினரும் சுன்னாகம் பட்டின சபையின் முன்னாள் உபதலைவரும் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும் தமிழர் விடுதலைக கூட்டணி மானிப்பாய் பிரதேசக் கிளையின் உபதலைவருமான

**ஆசீர்வாதம் ஹென்றி** அவர்கள்

காலமானதையிட்டு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் பாரியார் மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி.

*57/48, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(92237)

# அரசியல் தலைவர்கள் நிதானம் இழந்ததால் நாடு இன்று சமாதானத்தை இழந்துவிட்டது

## 'இந்து தர்மம்' வெளியீட்டு நிகழ்வில் உரை

வலிகாமம் தெற்கு,செப்.13

"இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி, மக்களை அமைதியாகவும சந்தோசமாகவும் வாழவைக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவே இந்து சமயப் பேரவை அயராது உழைதது வருகிறது. அரசியல் தலைவர்கள் நிதானம் இழந்த காரணத்தால் எமது நாடு சமாதானத்தை இழந்துள்ளது. சமாதானத்தை நிலைநாட்ட அனைத்து அரசியல் தலைவர்களும் முயற்சி செய்ய வேண்டும்."

யாழ்ப்பாணம் இந்துசமய பேரவையின் 'இந்து தர்மம்' மாதாந்த சஞ்சிகை வெளியீட்டு விழாவில் தலைமையுரையாற்றிய அருட்கவி சீ.விநாசித்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

அளவெட்டி ஸ்ரீ நாகேஸ்வரம் தேவஸ்தானத்தில் இச் சஞ்சிகை வெளியீடு இடம்பெற்றது.

இந்த நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதான வாழ்வு ஏற்படவேண்டும். அதற்காக நாம் பிரார்த்தனை செய்வோம். போரின் காரணமாகப் பல குழந்தைகள் அநாதைகளாகியுள்ளனர்; பலர் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர்; இளைஞர் சமூகம் போரில் மடிகிறது. இவற்றுக்கு ஒரு முடிவு தேவை. சமாதானம் ஏற்பட போரில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினருக்கும் மனமாற்றம் ஏற்பட வேண்டி இந்து சமயப் பேரவை பிரார்த்திக்கின்றது - என்று அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

இந்துசமயப் பேரவை செயலாளர் சி.சகதிகிரீவன் உரையாற்றுகையில்:-

நவீன உலகில் ஏனைய மதங்கள் தமது உண்மைகளை வெளிக்கொணர செய்தி ஊடகங்களைப் பயன்படுத்தி வருகின்றன. எமது இந்து மதமும் அந்தளவுக்கு தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

சஞ்சிகையை வெளியிட்டு வைதது உரையாற்றிய சைவப் பெரியார் அ.விஸ்வநாதன் -

இந்தியாவில் வெளியிடப்படும் பல சஞ்சிகைகளுக்கு நிகராக 'இந்து தர்மம்' நூலும் வெளிவர இந்துக்கள் அனைவரும் ஊக்கமும் ஒத்துழைப்பும் தரவேண்டும். எமது மதம் சம்பந்தமான செய்திகளை உணர்த்துவதற்கு இச்சஞ்சிகை பேருதவிபுரியும் - என்றார்.

சஞ்சிகையின் முதற்பிரதியை சீமாட்டி ஸ்தாபன உரிமையாளர் த.சற்குணராசா பெற்றுக்கொண்டார்.

(ஐ-152)

# காணாமற்போனோர் விசாரணை: 18 பேரின் உறவினருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலும் 18 பேர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவர்களது உறவினர்களை யாழ்.பொலீஸ் நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுள்ளனர்.

காணாமற்போனோரின் விவரமும் அவர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டோரின் விவரமும் முறையே வருமாறு:-

☆ இராசையா சுதர்மன் (கோவை இல.பி.ஐ.09/186) திருநெல்வேலி, நல்லூர். இராசையா சறோஜினி தேவி, திருநெல்வேலி, சந்திரன் சித்திரா இல.167, விபுலானந்தர் வீதி, அரியாலை. (சாட்சிகள்) விசாரணைக்கு வரும்போது காணாமற்போனவரின் புகைப்படத்தையும் கொண்டுவரவும்.

☆ நவரட்ணம் யோகநேசன் (கோவை இல.பி.ஐ.09/95) இல.50/18, செட்டித்தெரு, நல்லூர். (இவர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இப்பகுதி கிராம சேவகர் அழைக்கப்படுகிறார்)

☆ வேலாயுதபிள்ளை செல்வராஜா (கோவை இல.பி.ஐ.09/6) ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் தெற்கு. எஸ்.சண்முகராசா இளவாலை தபால்நிலைய ஊழியர், இப்பகுதிக் கிராம அலுவலர் (சாட்சிகள்).

☆ பரமு சந்திரசேகரன் (கோவை இல.பி.ஐ.358) இல.49, புதிய வீதி, கொய்யாத்தோட்டம். (இவர் தொடர்பான விசாரணைகளுக்கு ஜே-66 கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

☆ கந்தசாமி செந்தீபன் (கோவை இல.பி.ஐ.09/144) மீசாலை கிழக்கு, எஸ்.லதா கந்தசாமி, சதீபன், மீசாலை கிழக்கு (சாட்சிகள்)

☆ கந்தையா திவாகரன் (கோவை இல.பி.ஐ.09/132) தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (இப்பகுதிக் கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

☆ இராசையா சுப்பிரமணியம் (கோவை இல.பி.ஐ.09/181) வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணி. (இப்பகுதிக் கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

☆ மார்க்கண்டு விஜியகுமார் (கோவை இல.பி.ஐ.410) பண்டத்தரிப்பு, வடலியடைப்பு (ஜே-97 கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

☆ அன்ரன் நிக்சன்குமார் (கோவை இல.பி.ஐ.397) இல.7, மூன்றாம் குறுக்குத்தெரு, குருநகர்.

☆ பாலசிங்கம் பிரபாகரன் (கோவை இல.பி.ஐ.09/98) பலாலி வீதி, திருநெல்வேலி. (இப்பகுதிக் கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

☆ இராசவல்லி மதிவதனி (கோவை இல.பி.ஐ.220) இமையாணன் கிழக்கு, வல்வெட்டித்துறை. வேலுப்பிள்ளை பூர்ணிமா ஜே.342 கிராமசேவையாளர் (சாட்சிகள்)

☆ தங்கவடிவேல் இராஜேந்திரகுமார் (கோவை இல.பி.92) அல்வாய், பருத்தித்துறை. தாமோதரம்பிள்ளை தங்கவேலு, அல்வாய், பருத்தித்துறை. (சாட்சிகள்)

☆ சின்னத்தம்பி ஞானேஸ்வரன் (கோவை இல.பி.83) பரமு லட்சுமி, கரவெட்டி, நெல்லியடி. (சாட்சிகள்)

(ஐ-4)

# மாகாணங்களுக்கு இடையிலான தமிழ் மொழி தினப் போட்டிகள்

## யாழ்.அணிகள் கப்பல் மூலம் பயணம்

யாழ்ப்பாணம்,செப்.13

மாகாணங்களுக்கிடையிலான தேசிய மட்டப் பாடசாலைத் தமிழ் மொழித் தினப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம், 16ஆம் மற்றும் 22ஆம், 23 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள யாழ்.மாவட்ட மாணவர்கள் அணி நேற்றுமுன்தினம் கப்பல் மூலம் திருமலை சென்றுள்ளது.

22ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்கள் அணி எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கப்பல் மூலம் திருமலை செல்லவுள்ளது.

கொழும்பு விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் 15ஆம், 16ஆம் திகதிகளிலும் -

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில 22ஆம், 23ஆம் திகதிகளிலும் -

போட்டிகள் இடம்பெறவுள்ளன.

நேற்றுமுன்தினம் சென்ற மாணவர்கள் திருகோணமலை இந்துக் கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 10 பேரும் இன்று கொழும்பு செல்லவுள்ளனர். இவர்களுக்கான பயண ஒழுங்குகள் மற்றும் பிரயாணம், உணவு ஆகியவற்றுக்கான செலவுகளை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கவுள்ளார்.(ஐ-10-ரி)

# சந்நிதியில் வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.13

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை 'சைவத்தைப் பெருமைப்படுத்திய பெண்ணடியார்கள்' என்னும் தலைப்பில் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(ஐ-4)

# மாகாண ஆங்கிலதினப் போட்டி நாளை முதல் ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம்,செப்.13

2001ஆம் ஆண்டுக்கான மாவட்ட மட்ட, உப மாகாண ஆங்கில தினப் போட்டிகள் நாளை வெள்ளிக் கிழமை முதல் ஆரம்பமாகி எதிர் வரும் 19ஆம் திகதிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

போட்டிகள் தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டும் போட்டிகள் நடைபெறமாட்டாது.

போட்டி விவரம் வருமாறு:-

☆ 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை தனிநபர் வாய் மூலப் போட்டிகள்.

☆ 15ஆம் திகதி சனிக்கிழமை தனிநபர் எழுத்து மூலப் போட்டிகள்.

☆ 17ஆம் திகதி திங்கட்கிழமை குழுப்பாடல் போட்டிகள்.

☆ 18ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சிரேஷ்ட, கனிஷ்ட உரையாடல், நாடகப் போட்டிகள்.

☆ 19ஆம் திகதி ஆரம்பப் பிரிவு உரையாடல், நாடகப் போட்டிகள்.

இதே வேளை -

19ஆம் திகதி நடைபெற இருந்த சிரேஷ்ட பிரிவு கவிதை, நாடகப் போட்டிகள் மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் - அப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களையோ அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப் படத்தினையோ கொண்டுவர வேண்டும் எனவும் -

மாவட்ட மட்ட ஆங்கிலதினப் போட்டிகளின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமான சி.சிவராஜா தெரிவித்தார்.

(ஐ-ரி-10)

# ஆள்சேர்ப்பு பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.13

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு II பிரிவு 'ஆ' மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித்தரம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் (படவரைஞர்) பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கான ஆள்சேர்ப்புப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-10-ரி)

## கல்விச்சாலைக் காட்சிகள்



காரைநகர் அம்பாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட வலந்தலை ,வடக்கு அ.மி.த.க.பாடசாலை அதிபர் சி.பொன்னம்பலம் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட காரைநகர் தென்னிந்திய திருச்சபைக் குரு வண.அருட்திரு. செல்வநாயகம், தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபர் சு.வேலாயுதபிள்ளை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(ஐ-73)



வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீடும் அண்மையில் நடைபெற்றன. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, அதிபர் செ.யோகச்சந்திரன், பழையமாணவர் சங்கத் தலைவர் எப்.எக்ஸ்.குலநாயகம், வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.செல்வரத்தினம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்.)*




பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 17 பாலர் பாடசாலைகளும் இணைந்து நடத்திய விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 'யுனிசெவ்' நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் எல்லோனரா ரஸ்லோ விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

அருகில் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஷ்ணசாமி, கழகத் தலைவர் இ.தவகோபால் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஐ)



ஸ்கந்தவரோதயக் கல்லூரி கலை வர்த்தக மாணவர் மன்றத்தின் 'வணிகநாதம்' மலர் வெளியீட்டு விழாவில் சிறப்புவிருந்தினர் ஸ்ரீ இராமநாதன் உரையாற்றுகிறார். பிரதமவிருந்தினர் பேராசிரியர் சபா.ஜெயராசா, கல்லூரி அதிபர் திரு.க.சிவாஜி ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (ஐ)

# விரைவில் சம்பளத் திட்டம்

அரியாலை,செப்.13

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் பணியாளர்களுக்கு அங்கீகரித்த புதிய சம்பளத் திட்டத்தை விரைவில் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சங்கத்தின் உபதலைவர் எஸ். கணேசலிங்கம் தெரிவித்தார்.

சங்கத்தின் பணியாளர்களின் ஆளணியைச் சீர்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் -

ஆளணி சீர்செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தியானதும் அதற்கு கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்ததும் புதிய சம்பளம் அமுல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-17)


## அன்புடன் நன்றி கூறுகின்றோம்

**புனித அந்தோனியார் ஆலயம், எழுவைதீவு**


மேற்படி ஆலயத்திருத்த வேலைகளுக்காக இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட ரூபா ஒரு லட்சத்தில் ரூபா ஐம்பது ஆயிரத்தை காசோலையாக எமக்கு வழங்கி உதவியமைக்காக



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள்,
இந்துகலாசார அமைச்சர் மாண்புமிகு
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட
பிரதம அமைப்பாளருமான
**திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்



ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளரும், முன்னாள்
நாடாளுமன்ற உறுப்பினரும், ஊர்காவற்றுறைப்
பிரதேச சபைத் தலைவருமான
**திரு.ந.மதனராஜா (மனோ)**
அவர்களுக்கும்



இந்நிதி கிடைப்பதற்கு முன்னின்று உதவிய
ஈ.பி.டி.பியின் எழுவை தீவுப் பொறுப்பாளர்
**திரு.பா.றஞ்சித்குமார்**
(அலோசியஸ்)
அவர்களுக்கும்

பணத்தை அந்தோனியார் ஆலயத்துக்கென சிபார்சு செய்த
ஈ.பி.டி.பியின் எழுவைதீவுப் பிரதிநிதி
**திரு.சா..அகஸ்டீன் (ஜயாத்துரை)** அவர்களுக்கும்
மகிழ்ச்சியோடு மனமுவந்து அன்புடன் நன்றி கூறுகின்றோம்.

*எழுவைதீவு.* (92218) **பங்குச் சபையினரும், பங்கு மக்களும்.**



## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 - 09 - 1922



மறைவு 15 - 08 - 2001

**திருமதி புவனேஸ்வரி பெரியதம்பி**

2001-08-15இல் சிவபதம் அடைந்த எமது அன்புத் தாயாரின் பிரிவுச் செய்தி கேட்டு, எமது துயரில் பங்குகொண்டு, எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளின் போது எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்து ஆறுதலளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நாளை (2001-09-14) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*விநாயக முதலியார் தெரு,*
*பருத்தித்துறை.* (92223) **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
**திருமதி இந்துமதி தவீந்திரன்**

அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

(92221)


## சிறுவர் மாநாட்டுக்கு யாழ்.சிறுமி

யாழ்ப்பாணம்,செப்.13

சிறுவர் பாதுகாப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை கொழும்பில் நடக்கவிருக்கும் சிறுவர்களின் நாடாளுமன்றம் மற்றும் ஆயத்தப் பயிற்சிப் பட்டறை ஆகியவற்றில் பங்குபற்ற திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த செல்வி சுவர்ணஜா சோமசுந்தரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவர் இன்று கொழும்பு செல்கின்றார். (ஐ-3)

## புலிகளின் புலனாய்வு உறுப்பினர் கைதாம்

மட்டக்களப்பு நகருக்கு வடமேற்கே கறுப்புப் பாலத்தில் அமைந்துள்ள படையினரின் சோதனைச் சாவடியில் வைத்து கடந்த 9 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

படையினரைக் கண்டதும் இந்த இளைஞர் சயனைட்டை உட்கொள்ள முனைந்ததாகவும் -

எனினும் படையினர் அவரைக் கைது செய்ததாகவும் -

தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

செங்கலடியைச் சேர்ந்த கிருபராசா ஜெயராசா (வயது 21) என்று அடையாளம் காணப்பட்ட அந்த உறுப்பினரும், அவரது உடைமைகளும் மேலதிக விசாரணைக்காக மட்டக்களப்பு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஐ-3)

## பாடசாலை இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.13

கரவெட்டி பீகொன் கல்வி நிலையத்தில் இயங்கி வந்த மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் நேற்றுமுன்தினம் முதல் நாவலர் மடம் அ.த.க. பாடசாலையில் இயங்குவதாக வித்தியாசாலையின் அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-3)

## உணவு முத்திரை விநியோகம்

அரியாலை,செப்.13

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவுக்குரிய முத்திரைகள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவையாளர் ஊடாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ-17)

## முதியவர்களை கௌரவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.13

முதியோர் வாரத்தை முன்னிட்டு நவாலி ஹேமலதா செல்வராஜா குழந்தைகள் ஞாபகார்த்த நல நிதியம், வறிய நிலையில் உள்ள பத்து முதியவர்களைக் கௌரவிக்கவுள்ளது.

நவாலி கிராமத்தில் வசிக்கும் 70வயதுக்கும் நூறு வயதுக்கும் இடைப்பட்ட வயோதிபர்கள், வறுமை, அநாதை, விதவை, உதவி கிடைக்காத நிலையில் உள்ள வயோதிபர்கள் ஆகியோரில் இருந்து பத்துப் பேர் தெரிவுசெய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களைப் பெற்று, கிராம சேவையாளரின் சிபாரிசுடன் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3-185)

## புலிச்சின்னத்துடன் மட்டுநகரில் துண்டுப்பிரசுரங்கள்

மட்டக்களப்பு,செப்.13

"மட்டக்களப்பின் மையப் பகுதியில் விரைவில் புலிக்கொடி பறக்கும்" என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரங்கள் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு நகரின் முக்கியமான பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிச் சின்னத்துடன் ஒட்டப்பட்டிருக்கும் இந்தச் சுவரொட்டியில் தமிழீழத்தை வென்றெடுப்பதற்கு இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் போராட்டத்தில் இணைய முன்வரவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசாரப் பிரிவினர் இந்த துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளனர்.(க-4)


உ

சாமியே சரணம் ஐயப்பா!

## இருபாலை வீதி-கோண்டாவில் கிழக்கு (சந்தி) அருள்மிகு ஸ்ரீ சபரீச ஐயப்ப சுவாமி திருக்கோயில்

மேற்படி ஆலய கட்டட நிர்மாண வேலைகள் 09-09-2001 ஞாயிற்றுக் கிழமை அடிக்கல் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகி பாலஸ்தான அங்குரார்ப்பணமும் நடைபெற்றது. இப்பொழுது ஒரு காலப் பூசையுடன் சிறிய மலைமீது 18 படிகளுடன் கூடிய ஸ்ரீ ஐயப்பன் ஆலய நிர்மாண வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**ஐயப்பன் பக்தர்களே!**

இந்த ஐயப்பன் ஆலயத்தை வெகு விரைவில் அமைத்து அடியார்கள், குருமார்கள், அன்பர்கள் அனைவரும் வந்து கண்டு களித்து இன்புற தங்களாலியன்ற நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவிகள் செய்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஐயப்பன் அடியார்கள் வந்து தரிசனம் செய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வார்களாக!

**ஐயப்பன் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்!**
**சாமியே சரணம் ஐயப்பா!**

இவ்வண்ணம்
யாழ்.சபரீச சேவா சங்கத்தலைவர்
சிவஸ்ரீ தாணு.வாசுதேவக்குருக்கள்

(92219)



## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

*13-09-2001*

HAPPY



BIRTHDAY

## செல்வன் மனோஜன்

குடத்தனையைச் சேர்ந்த
பேமராஜ்-சுமதி தம்பதிகளின் செல்வப்புதல்வன்

**மனோஜன்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (13-09-2001) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். மனோஜனை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், ஜேர்மனியில் வசிக்கும் பெரியமாமா, சின்னமாமா குடும்பத்தினர், லண்டனில் வசிக்கும் குட்டிமாமா, சித்தி, அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார், மச்சான்மாரான சுவர்ணன், சிந்துஜன் ஆகிய அனைவரும் வீரபத்திரர் அருள் பெற்று, முதலியம்மன் துணையோடு பல்கலையும் கற்று சீருஞ்சிறப்புடனும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தற்காலிக முகவரி:
*புலோலி வடகிழக்கு,*
*புலோலி, பருத்தித்துறை.* (C-18230)

ச.பேமராஜ்
(அப்பா)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 - 08 - 1922



இறப்பு 25 - 08 - 2000

## அமரர் மயிலு கந்தையா

திதி:13-09-2001

**அன்பென்ற இலக்கணத்துக்கு அப்பாவாகி**
**ஆண்டவனின் சந்நிதியில் அவன் தாள் சேர்ந்து**
**என்றும் நல்வாழ்வு வாழ எமக்கு வழிகாட்டிய**
**எங்கள் இனிய உறவே!**
**நெஞ்சிருக்கும் வரை உம்மை நாம் மறவோம்.**

உங்கள் ஆத்மாவின் சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

*பத்தமேனி, வைரவர் கோயிலடி,*
*அச்சுவேலி.* (91948)

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

# சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், செப். 13

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் கடந்த ஏப்ரல் மாதம் நடத்திய இளஞ் சைவப் புலவர், சைவப் புலவர் பரீட்சைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

முடிவுகள் வருமாறு—

### இளஞ் சைவப் புலவர் இரண்டாம் வகுப்பில் சித்திபெற்றோர்:-

★ பரமலிங்கம் ஜெயக்குமார்— கோண்டாவில்.

★ சண்முகலிங்கம் முகுந்தன்—இணுவில்.

★ செல்வி அஜந்தகௌரி துரைச்சாமி—மானிப்பாய்.

★ ஆறுமுகம் சிவகுமார்—பண்டத்தரிப்பு.

★ கணேசபிள்ளை கிருபாகரன்—கோப்பாய்.

★ சண்முகநாதன் நவநீசன்—கோண்டாவில்.

★ குகநாதன் செந்தில்குமரன்—கோண்டாவில்.

★ செல்வி நந்தினி சிவகுரு—இணுவில்.

★ குலசிங்கம் றஜீவன்—கன்னாகம்.

### மூன்றாம் வகுப்பில் சித்திபெற்றோர்:-

★ செல்வி விஜிதா வரதராஜா—சண்டிலிப்பாய்.

★ செல்வி பிரிந்தா பரராசசிங்கம்—சண்டிலிப்பாய்.

★ பாலசுப்பிரமயம் சத்தியமூர்த்தி— இணுவில்.

★ செல்வி கலாராணி நடராசா—இணுவில்

★ கணேசு உமாசுதன்— இணுவில்.

★ செல்வி கோதண்டவாணி கோகிலரதன் — பருத்தித்துறை.

### சைவப்புலவர் இரண்டாம் வகுப்பில் சித்தி பெற்றோர்:-

★ செல்வி சுறாகினி மார்க்கண்டு — அளவெட்டி.

★ செல்வி உமிலா தேவி உலகநாதன் — கோப்பாய்.

★ செல்வி கார்த்திகா சரவணபவன் — தாவடி.

★ வேலாயுதர் ஜெயகுரு— சுழிபுரம்.

★ அப்பாத்துரை கருணாகரன் — சுழிபுரம்.

★ வேலாயுதபிள்ளை கமலேஸ்வரன் — கொக்குவில்.

★ செல்வி விமலநாயகி கணபதிப்பிள்ளை — கரவெட்டி.

★ செல்வி கோகிலவதனி நாகமுத்து — கொடிகாமம்.

★ செல்வி கேமலோஜினி கனகரட்ணம் — ஆனைக்கோட்டை

★ திருநாவுக்கரசு தீபன் — சண்டிலிப்பாய்.

★ செல்வி றூபி திருநாவுக்கரசு — சண்டிலிப்பாய்.

★ திருமதி தயாநிதி சத்தியரூபன் — நீர்வேலி.

★ பொன்னுத்துரை சந்திரவேல் — ஏழாலை.

★ சிவதாஸன் மதனமோகனராஜ் — குப்பிளான்.

★ வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன் — திருகோணமலை.

★ செல்வி ரேவதி பிரபாகராசா — நீர்வேலி.

★ செல்வி ஜெயந்தி கோபாலபிள்ளை — கொக்குவில்.

★ வெற்றிவேல் சக்திவேல் — வட்டுக்கோட்டை.

### மூன்றாம் வகுப்பில் சித்தி பெற்றோர்:-

★ அம்பலவாணர் இராஜரட்ணம் — யாழ்ப்பாணம்.

★ செல்வி மனோரஞ்சினி சுப்பிரமணியம் — வட்டுக்கோட்டை.

(ஐ-3)

## புலோலி ஆசிரியை ஒருவர் செப்ரிசீமியாவால் மரணம்!

வடமராட்சி, செப். 13

செப்ரிசீமியா நோயினால் பீடிக்கப்பட்ட இளம் ஆசிரியை யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

புலோலி தெற்கு, புற்றளையைச் சேர்ந்த திருமதி இந்துமதி தவேந்திரன் என்ற ஆசிரியையே இவ்வாறு மரணமானவராவார்.

சாதாரண காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இவர், மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அவர் செப்ரிசீமியா நோய்க்கு இலக்கானதாகக் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த வேளையில் இவர் மரணமானார்.

இவர் திருமணம் முடித்து மூன்று மாதங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-173)

## அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம், செப். 13

சங்கானை சின்னம்மா மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைப்பார்.

(ம-4)

## பாண் விலை விலை ரூ. 11

தென்மராட்சி, செப். 13

குடாநாட்டில் நேற்று தொடக்கம் பாணின் விலை அதிகரித்துள்ள போதிலும் கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வெதுப்பகத்தில் உற்பத்தி செய்யப்படும் 450 கிராம் பாண் மறுஅறிவித்தல் வரை 11 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுமென சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

(ம-117)

## பாதுகாவலர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 13

வடபகுதியில் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இராசாவின்தோட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தின் முன்னாள் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவிருப்பதால் சகல உறுப்பினர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் ப. செல்வராசா கேட்டுள்ளார்.

(ம-7)

## புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி, செப். 13

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 300 மாணவர்களுக்குத் தொழிலதிபர் ந. பாஸ்கரன் புலமைப்பரிசில் நிதியத்தில் இருந்து புலமைப்பரிசில் வழங்கும் ஆரம்ப நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தலைமையில் நடைபெறும்.

வலயப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் கல்வி பயிலும் இந்த மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 100 ரூபா வீதம் புலமைப் பரிசில் நிதி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-117-118)

## தடுப்பு மருந்து ஏற்றாததால் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், செப். 13

மூன்று மாதங்களுக்கு முன் விசர் நாயினால் கடியுண்ட ஒருவர், விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து (ஏ. ஆர். வி.) போடத் தவறியமையால் நீர் வெறுப்பு என்னும் விசர் நாய்க் கடி நோய்க்குள்ளாகி உயிரிழந்தார்.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அப்புத்துரை ஞானசேகரம் (வயது14) என்பவரே மரணமானவராவார்.

காய்ச்சலுடன் மூச்சுத் திணறல் காணப்பட்டதை அடுத்து கடந்த 10 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மறுநாள் அங்கு மரணமானார்.

(ம-15)

## ஆசிரியர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 13

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளினதும் தலைவர், செயலாளர், பொருளாளர், மாவட்ட நிர்வாகிகள், தாய்ச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கான கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வ. கணேசமூர்த்தி தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் க. குமாரசாமி அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் குறை நிவர்த்திச் சேவை, உலக ஆசிரிய தினம், சங்கத்தோடு ஆலோசிக்காமல் செய்யப்படும் ஆசிரிய இடமாற்றங்கள் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

(ஐ)

## குறைநிவர்த்திச் சேவை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 13

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களுடன் இணைந்து அடுத்த வாரம் ஆரம்பிக்கவிருந்த ஆசிரியர்களுக்கான குறைநிவர்த்திச் சேவை, ஐந்து வலயப் பணிப்பாளர்களும் அடுத்த வாரம் கடமையின் நிமித்தம் திருமலை செல்வதினால் அடுத்த மாதம் முதல் வாரத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

இக்குறைநிவர்த்திச் சேவைக்கு விண்ணப்பிக்கும் இறுதித்திகதி இம்மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாகவும், ஏற்கனவே அறிவித்த இடங்களில் இதற்குரிய படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

## மருத்துவ பரிசோதனைக்கு திவ்வியனை உட்படுத்தப்பணிப்பு

யாழ். பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் இ. த. விக்னராஜா நேற்று உத்தரவிட்டார்.

திவ்வியனை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தி மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கும்படி உயர் நீதிமன்றம் யாழ். போதனாவைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் கேட்டிருந்தது. இந்த விடயம் சட்ட வைத்திய அதிகாரியினால் யாழ். மாட்ட நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து மேற்படி உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

திவ்வியனை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது சட்ட வைத்திய அதிகாரியோ அல்லது வேறு வைத்திய நிபுணரோ அவர் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறவேண்டுமெனத் தெரிவித்தால் அவரை வைத்தியசாலையில் தங்கவைத்து சிகிச்சை அளிக்க வேண்டும் எனவும்—

வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள போது திவ்வியனுக்கு விலங்குகள் மாட்டக் கூடாது எனவும்—

நீதிவான் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

(ம-10-ரி)

### திருமண வீட்டில்

## வீடியோ எடுத்த இளைஞன் படையினரால் கைது!

திருமணவீட்டில் வீடியோப் படம் பிடிப்பதற்குச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்றுப் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

பருத்தித்துறை, இன்பருட்டிப் பகுதியில் உள்ள திருமணவீடொன்றிற்குப் படம் பிடிக்கச்சென்ற அல்வாய் வடக்கைச் சேர்ந்த சண்முகம் சாந்தகுமார் (வயது 32) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இன்பருட்டிக் கடற்கரைப் பகுதியிலுள்ள திருமணவீட்டுக்கருகில் படம்பிடித்துக் கொண்டிருந்த சமயம் அங்கு நிலைகொண்டுள்ள படையினரால் படம் பிடிப்பதற்கான அனுமதி பெறப்படவில்லை எனத் தெரிவித்துக் கைது செய்யப்பட்ட அவர் பின்னர் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறிப்பிட்ட நபர் உடனடியாக காங்கேசன் கைதிகள் தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தற்போது இவரும் மூதூர் கூனித்தீவைச் சேர்ந்த சிவனேஸ்வரன் என்பவரும் அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று அங்கு சென்று வந்த மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

(ம-10-ரி-117)

## நகர வீதிகளில் மீண்டும் நடைபாதைக் கடைகள்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். நகரப் பகுதிகளில் மீண்டும் நடைபாதை வியாபாரிகளின் நெருக்கடி தலைதூக்கியுள்ளது. இதனால் வீதியால் போவோர், வருவோர் நெருக்கடிகளைச் சந்திப்பதுடன், விபத்துக்களையும் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பஸ் நிலையப் பகுதி திருத்தவேலைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதனால் பஸ்கள் குறித்த சில வீதிகளின் ஓரமாக நிறுத்தப்பட்டு, பயணிகளை இறக்கி ஏற்றும் பணி நடைபெற்றுவருகிறது.

இதனால் ஏற்கனவே வாகன நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள வீதிகளில் தற்போது தலைதூக்கியுள்ள நடைபாதைக் கடைகளினால் மேலும் நெருக்கடி நிலை அதிகரித்துள்ளது.

நகரப்பகுதி எங்குமே இந்த வீதிபேர நடைபாதைக் கடைகளே அதிகமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-15)

## அமெ. மீதான தாக்குதலுக்கு ஜனாதிபதி சந்திரிகா கண்டனம்

அமெரிக்காவின் உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீதும் பெண்டகன் மீதும் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களுக்கு தனது அதிர்ச்சியையும் வருத்தத்தையும் தெரிவிப்பதாக ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அனுப்பிவைத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகப் பயங்கரவாதம் ஒடுக்கப்படவேண்டும் எனவும் அவரது செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நியூயோர்க்கிலும் வாஷிங்டனிலும் நிகழ்ந்துள்ள பயங்கரத்தை நாம் பார்த்தோம். அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்திலும் பெண்டகன் மாளிகையிலும் ஏனைய பகுதிகளிலும் என்றுமில்லாதளவு பாரிய தாக்குதல் நடைபெற்றதனால் நான் பெரும் அதிர்ச்சியும் திகிலும் அடைந்துள்ளேன். இதனால் அப்பாவி உயிர்கள் பல பலியாகியும் பலர் காயப்பட்டும் சொத்துக்கள் அழிந்தும்போயுள்ளன.

இந்தக் கோழைத்தனமான தாக்குதலை இலங்கை மக்களும் கண்டிக்கின்றனர். அமெரிக்க மக்களுக்கும் குறிப்பாகத் தாக்குதலால் பாதிப்படைந்த நியூயோர்க் குடும்பங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இலங்கையர்களாகிய நாம் அடிக்கடி பயங்கரவாதச் சம்பவங்களை அனுபவித்து வருகின்றோம். மிகவும் அண்மையில் எமது ஒரேயொரு சர்வதேச விமானநிலையம் தாக்கப்பட்டபோதும் இதனை அனுபவித்தோம், அமெரிக்க மக்களின் மனக்கசப்பையும் ஏமாற்றத்தையும் எம்மால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

பயங்கரவாதத்தைச் சர்வதேச சமூகம் கூட்டாக ஒடுக்க வேண்டியதன் தேவையை இத்தாக்குதல்கள் மீண்டும் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளன. இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக நாம் எமது முயற்சிகளை இருமடங்காக்க வேண்டும். இது விடயத்தில் எடுக்கப்படக்கூடிய சர்வதேச ரீதியான முன்முயற்சிகள் யாவற்றிற்கும் இலங்கை தனது முழுமையான ஒத்துழைப்பைத் தரத் தயாராகவிருக்கிறது என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(ம)

## நீர்விநியோக தடங்கல் பற்றிய அறிவித்தல்

இன்று (13.09.2001) வியாழன், நாளை (14.09.2001) வெள்ளி ஆகிய இரு தினங்களில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள 375 மி.மீ வால்வ் திருத்தவேலை செய்யவேண்டியிருப்பதால் இவ்விரண்டு நாள்களும் பிரதான தாங்கியின் மேற்குப்பகுதிக்கு நீர் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். (C/18248)

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

உ
வல்லிபுரேசன் துணை



## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2001

### 17.09.2001 முதல் 03.10.2001 வரை

நிகழும் விஷு ஆண்டு புரட்டாதித் திங்கள் முதலாம் நாள் (17.09.2001) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்குக் கொடியேற்ற வைபவம் நடைபெற எம்பெருமான் திருவருள் பாலித்துள்ளார். இதனைத் தொடர்ந்து பதினேழு தினங்கள் மஹோற்சவம் நடைபெறும். மஹோற்சவ காலங்களில் பெருமானைத் தரிசித்துப் பேரானந்தப் பெருவெள்ளத்துள் மூழ்கி அருள்பெற்று ஆனந்தமடைய அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

### பிரதான உற்சவங்கள்

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 17.09.2001 | திங்கட்கிழமை | முற்பகல் 11 மணி |
| சப்பறத்திருவிழா | 30.09.2001 | ஞாயிற்றுக்கிழமை | இரவு 8 மணி |
| தேர்த்திருவிழா | 01.10.2001 | திங்கட்கிழமை | காலை 8.30 மணி |
| சமுத்திரத்தீர்த்தம் | 02.10.2001 | செவ்வாய்க்கிழமை | பிற்பகல் 2 மணி |
| கேணித் தீர்த்தம் | 03.10.2001 | புதன்கிழமை | பகல் 10 மணி |
| கொடியிறக்கம் | 03.10.2001 | புதன்கிழமை | மாலை 4 மணி |

### மஹோற்சவ கால பூசை நேர ஒழுங்குகள்

(பஞ்சாங்க நேரப்படி)

| காலை | | மாலை | |
|---|---|---|---|
| உசாக்காலம் | 7 மணி | சாயரட்சை பூசை | 3.30 மணி |
| 2ஆம் காலம் | 8 மணி | மாலைப்பூசை | 3.45 மணி |
| அபிஷேக ஆரம்பம் | 9 மணி | ஸ்தம்ப பூசை | 4.00 மணி |
| விசேட பூசை | 9.45 மணி | அர்த்தசாமப்பூசை | 6.30 மணி |
| ஸ்தம்ப பூசை | 10 மணி | | |
| உச்சிக்காலம் | பகல் 12 மணி | | |

### முக்கிய குறிப்புகள்

1. பருத்தித்துறையிலிருந்து காலை 9 மணிக்கும் மாலை 3 மணிக்கும் மேற்படி ஆலயத்திற்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
2. கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல் யாவும் இரண்டாம் வீதியில் நடைபெறவேண்டும். திருவிழாக் காலங்களில் திருமணம், தனிப்பட்ட அபிஷேகம் ஆகியவை இடம்பெறாது.
3. பெண்களும் குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவு குறைத்துக் கொள்ளுதல் விரும்பத்தக்கது.
4. சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறாக உடைகள் அணிந்து வருதல் தவிர்க்கப்படவேண்டும்.
5. மஹோற்சவ காலத்தில் பண்ணிசைப் போட்டி கீழ்ப்பிரிவு (தரம் 4 - தரம் 8), மேற்பிரிவு (தரம் 9 - தரம் 13) என நடைபெறும். விண்ணப்ப முடிவுதிகதி 20.09.2001, கீழ்ப்பிரிவு போட்டித் திகதி 22.09.2001 பகல் 12 மணி, மேற்பிரிவு போட்டித் திகதி 23.09.2001 பகல் 12 மணி, பரிசளிப்புத் திகதி 07.10.2001 பகல் 11 மணிக்கு. பஞ்சபுராணத்துடன் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஒரு பாடல் பண்ணுடன் பாடுதல் வேண்டும். பாடசாலை அதிபரின் உறுதியுரையுடன் அனுப்பப்படல் வேண்டும். விவரங்கள் ஆலய கரும பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
6. தற்காலிக வியாபார நிலையங்கள் 15.09.2001 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒதுக்கீடு செய்யப்படும். வாடகையில் 1/2 பகுதி பணம் உடன் செலுத்த வேண்டும்.
7. பணமாகவோ பவுணாகவோ பூசை உபகரணங்களாகவோ அரிசி முதலிய பொருள்களாகவோ அன்பளிப்புச் செய்வோர் அனைவரும் ஆலய நிதி அலுவலகத்தில் பதிவுசெய்து பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

வங்கிக் கணக்கிலக்கம்:
இலங்கை வங்கி, பருத்தித்துறை - C.A. 5014
தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை - S.A. 1002

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில். - அறங்காவலர் சபை.
துன்னாலை வடக்கு, புலோலி. (C/18246)

## திருநெல்வேலி மத்திய விளையாட்டுக் கழகம்

எமது கழகத்தினால் நடத்தப்படும் மென்பந்து கிறிக்கெற் சுற்றுப் போட்டியில் பங்கு பெறுவதற்காக விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொண்ட விளையாட்டுக் கழகங்கள் 17.09.2001 திங்கள் பிற்பகல் 4.00மணிக்கு முன்பதாக படிவங்கள் பெற்றுக் கொண்ட இடங்களிலே நுழைவுக் கட்டணத்துடன் மீளளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

★ 18ம் திகதி Row வைப் பெற்றுக் கொள்ளலாம்.

விளம்பர அனுசரணை: ஹரிஹரன் பிறின்டேர்ஸ், 424A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

திருநெல்வேலி மத்திய விளையாட்டுக்கழகம் (TCSC) கலாசாலை வீதி, திருநெல்வேலி.

## உடற்கல்வி புத்தூக்க வகுப்புகள்

தென்மராட்சி,செப்.13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் உடற்கல்வியைப் பாடமாகத் தோற்றும் மாணவர்களுக்கான புத்தூக்க வகுப்புகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இவ்வகுப்பில் தோற்றவுள்ள மாணவர்கள் மைதான உடைகளுடன் வருகைதருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## பாரதிநேசன் நினைவு தின நிகழ்வு

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஏற்பாட்டில் நடைபெறும் மூத்த பத்திரிகையாளர் 'பாரதிநேசன்' வி.சின்னத்தம்பியின் நினைவுதின நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு கலை, இலக்கிய, ஊடகத்துறை ஆகியவற்றைச் சேர்ந்த பிரமுகர்கள் நினைவுரையாற்றவுள்ளதாக சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார். (ம-117)

## நல்லூர் பிரதேச சபை மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.13

நல்லூர் பிரதேச சபையின் மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரையும் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான அட்டவணையை இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் சகல சனசமூக நிலையங்களும் பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று விளையாட்டு சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.(ம-10)

## கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் தலைவர்களுக்கான முரண்பாட்டுத் தீர்வு கல்விக் கருத்தரங்கு எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கருத்தரங்கில் கலந்துகொள்ளத் தெரிவுசெய்யப்பட்ட மாணவ தலைவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## ஆட்டம் கண்ட...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் 8 வெளிநாட்டினரைத் தலிபான்கள் கைது செய்து விசாரணை நடத்திவருகின்றனர். அந்த 8 பேரில் அமெரிக்கர்களும் உள்ளனர். அதனையே காரணமாக வைத்து, தலிபான்கள் மீது - தனது நாட்டவரை விடுவிப்பதாகக் கூறிக்கொண்டு அமெரிக்கா தனது 'எண்ணத்தை' செயலாக்க முனையும் என்று கருதப்படுகிறது.

விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்குக் காரணமானவர்களை அமெரிக்கா எப்படி வேண்டுமானாலும் தண்டிக்க முடியும்.

ஆனால், உலக வர்த்தக நிலையம் போன்று தரைமட்டமாகிவிட்ட-

'பெண்டகன்' போன்று சிதைந்து போய்விட்ட -

அரை அங்குல உயரத்து சாம்பல் தூசிப் படலத்தால் மூடப்பட்டுள்ள நியூயோர்க், மன்ஹட்டன் பகுதிகளாகிவிட்ட -

அமெரிக்கப் பெருமிதத்தையும், சுயகௌரவத்தையும் அவற்றால் மீட்பது என்பது சந்தேகமே.

வியட்நாமியப் போரைப் போன்று - அதைவிட ஆழமான - வடுவாக விமானத்தற்கொலைத் தாக்குதல்கள் அமெரிக்கர்களின் மனங்களில் பதிந்துவிட்டன என்பதே உண்மை

## இவரைக் காணவில்லை

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்தவரும்
யாழ்.மத்திய கல்லூரியின் தரம் - 6 மாணவனுமாகிய

### செல்வன் தேவராசா ரமேஸ்

என்பவரை 11.09.2001 செவ்வாய்க்கிழமை பாடசாலை முடிந்த பின் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு உடன் அறியத்தரவும்.

இ.தேவராசா
திருநெல்வேலி ஸ்ரோர், திருநெல்வேலி. (92238)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் திரு.வ.உதயகுமார் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி வல்லிபுரம் அன்னம்மா

அவர்களின் மரணச்செய்தி கேட்டு கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
வட.தெ.மே.பிரதேச சபை,
கரவெட்டி. (C/18247)

செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியையான

திருமதி

### இந்துமதி தவேந்திரன்

அவர்களது மறைவையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, - மாணவர்கள்.
புத்தூர். (92246)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அபிராமி பாலசிங்கம்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் குருமனை, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அபிராமி பாலசிங்கம் அவர்கள் நேற்று (12.09.2001) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

இவர் அமரர்கள் இராமு செல்லையா, பார்வதி செல்லையா ஆகியோரின் அன்பு மகளும், க.பாலசிங்கம் அவர்களின் நேசமனைவியும், அமரர் செ.கனகசபை மற்றும் செ.கந்தப்பசேகரம், அமரர் என்.கனகம்மா மற்றும் என்.கமலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அருள்திரு. பி.தேவதாஸ், மோகனதாஸ், தவதாஸ், பிரமிளா, பகீரதி, தர்மினி, விஜயரூபன் ஆகியோரின் அருமைத் தாயாரும், புனிதவதி, கேதீஸ்வரி, நரேந்திரநாதன், சாரங்கபாணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், விஜிதா, மயூரன், குமுதா, குமரன், டிஷனா, திருமதி ஜோய்தேவதாஸ், திருமதி எழிலரசி, மோகனதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு இன்று (13.09.2001) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு குருமனை, சங்கானையில் நடைபெற்றுப் பூதவுடல் சங்கானை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தென்னிந்தியத் திருச்சபை,
குருமனை,
சங்கானை. (92245)

தகவல்:
அருள்திரு.பி.தேவதாஸ்
(மகன்)

### முருகு மாணிக்கம்

உசன் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்பொழுது மானிப்பாய் வீதி, குருகமதவடி, ஆனைக்கோட்டையில் வசித்து வந்தவருமாகிய முருகு மாணிக்கம் நேற்று (12.09.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முருகு - செல்லம்மா தம்பதியினரின் மூத்த மகனும், பூரணத்தின் அன்புக் கணவரும், இராமலிங்கம் (சின்னத்தம்பி), நடேசு, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரிமளாதேவி, கெங்காதேவி (இந்தியா), பத்மநாதன் (கொழும்பு), புஸ்பராணி (இந்தியா), யோகராஜா (இத்தாலி), அருந்தவராணி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வராசா (செல்வம்), கணேசு (ஜேர்மனி), சௌந்தரி (கொழும்பு), வதனா (இத்தாலி), பிக்கினிராஜா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிதா (கொழும்பு), கவிதாசன் (இத்தாலி), கலீஸ்டா, றஜிதா (கொழும்பு), ஐமுனா, ஜானகி (இந்தியா), சாம்சன், செபலோன் (கொழும்பு), டிலான் (இத்தாலி), பிரசாந், அபினா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.09.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் (இ.நே.) காக்கைதீவு கரையாப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆனைக்கோட்டை. (92248)

தகவல்:
செல்வம்
(மருமகன்)

# துறைமுகப் பாதுகாப்பை ஆராய லண்டனில் இருந்து குழு வருகை

கொழும்பு,செப்.13

கட்டுநாயக்கா விமான நிலையம், கொழும்புத் துறைமுகம் ஆகியவற்றின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென லண்டனைச் சேர்ந்த 'டிரைட்டன்' பாதுகாப்புக் குழுவினர் கொழும்பு வந்துள்ளனர்.

அவர்களின் அறிக்கை கிடைத்ததும் கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கு மேலதிக கட்டணம் அறவிடப்படுவது நிறுத்தப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் துறைமுகங்கள் அபிவிருத்தி, தென்பகுதி அபிவிருத்தி அமைச்சர் ரொனி டி மெல்.

கொழும்புச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள 'டிரைட்டன்' பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த 14 பேரும் இரண்டு வாரத்தில் தமது அறிக்கைகளைத் தயாரித்து விடுவர். அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக இந்தக் குழுவினர் காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

- என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## 17ஆவது திருத்தத்துக்கு நீதிமன்ற ஒப்புதல் பெற அரசு நடவடிக்கை

கொழும்பு,செப்.13

அரசமைப்புக்கான 17ஆவது திருத்தத்தை அவசர பிரேரணையைக் கருதி விரைவில் உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்து, அதன் ஒப்புதலைப் பெறுவது என அரசு தீர்மானித்துள்ளது.

சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு, பொலீஸ் ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு ஆகியவற்றை உருவாக்குவது தொடர்பான விடயங்களே இந்த 17 ஆவது திருத்தத்தில் அடங்குகின்றன.

உயர்நீதிமன்றத்தின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் இந்தத் திருத்தம் தொடர்பான விவாதத்தை நாடாளுமன்றத்தில் நடத்தி அதை நிறைவேற்றுவது என நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

சுதந்திரமான ஆணைக்குழுக்கள் உருவாக்கப்படவேண்டும் என்ற திட்டம் எதிர்கட்சிகளால் ஒன்றிணைந்து முன்வைக்கப்பட்டிருப்பினும் அதைத் தற்போது அவசரத் தீர்மானமாகக் கருதி அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது என நீதிஅமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதன்படி 17ஆவது திருத்தம் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 24 மணித்தியாலயங்களுக்குள் நீதிமன்றத்தில் ஒப்புதலை பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம)

## சபாநாயகர் வெளிநாடு பயணம்

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் 47ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் இரு குழுக்களுக்குத் தலைமைதாங்கி சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கவும் உபசபாநாயகர் சரத் முனசிங்கவும் வெளிநாடுகளுக்குப் பயணமாகி உள்ளனர்.

அரசாங்கக்கட்சி, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 18 எம்.பிக்கள் இந்த இரு தூதுக்குழுக்களிலும் அடங்கியுள்ளனர். இரு குழுக்களும் ஞாயிற்றுக்கிழமையன்று புறப்பட்டுள்ளன.

பொதுநலவாய நாடாளுமன்ற குழுவில் நிறைவேற்று மன்றம் அனுரா பண்டாரநாயக்கவை தென்னாசியப் பிராந்தியத்தின் பிரதிநிதியாகக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ம)

### குண்டு வெடிப்பைத் தொடர்ந்து

## தடுத்து வைக்கப்பட்ட வடமராட்சி மீனவர் 5 பேரும் நேற்று விடுவிப்பு

வடமராட்சி,செப்.13

வடமராட்சிக் கடலில் அண்மையில் கட்டுமரத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பை அடுத்து கைது செய்யப்பட்டிருந்த 42 மீனவர்களில், தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 பேரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுமாலை 4 மணியளவில் இவர்கள் அனைவரும் பருத்தித்துறை மேலதிக நீதிவான் அ.பிறேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

எனினும் இவர்களது கட்டுமரங்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி நீதிமன்றத்திடம் மனுத்தாக்கல் செய்யும்படி நீதிவான் மீனவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

இதேவேளை -

வடமராட்சி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீனவர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாட உள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-173-117)

## யாழ்.சிறையில் கைதிகள் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சுமார் 38 பேர் நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளதாக அறியப்படுகிறது.

தம்மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும் இல்லையேல் தம் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் எனக்கோரியே இக்கைதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இது பற்றித் தகவல் தெரிவிக்க சிறைச்சாலை அதிகாரிகள் மறுத்துவிட்டனர். (ம-10-ரி-173)

மானிப்பாய் பிரதேச சபையின் அனுசரணையுடன்

### யாழ்.மாவட்டத்துக்கான கராத்தே வெற்றிக் கிண்ணப் போட்டிக்கான கூட்டம்

காலம் : 23.09.2001 11.00 மணி (S.L.T)

இடம் : யாழ்.மத்திய கல்லூரி

*யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கராத்தே கழகங்களையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்.*

(92247) போட்டியை வழிநடத்துபவர் - P.ராஜன் மாஸ்ரர்.

### நன்றியுடன் பாராட்டுகின்றோம்


**கரவெட்டி தச்சன்தோப்பு பிள்ளையார் ஆலயத்தின்**

தேர்த்தரிப்பிடப் (தேர்முட்டி) புனரமைப்புக்கு ரூபா பத்து லட்சத்தை (ரூபா 10,00,000) புனரமைப்பு நிதியிலிருந்து மனமுவந்து ஒதுக்கி உதவிய,



*வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு – கிழக்கு தமிழ் விவகார அமைச்சர்*

மாண்புமிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும்



*யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்,*

உயர்திரு. கே.வி.குகேந்திரன் (ஜெகன்) அவர்களையும்

*கரவெட்டிப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர்*

திரு.ப.ரவீந்திரன் (ராசிக்) அவர்களையும்

இதற்கு முன்னின்று உழைத்த எமதூர் இளைஞர்களையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

அறங்காவலர் சபை,
*கரவெட்டி தச்சன்தோப்பு பிள்ளையார் ஆலயம்,*
*கரவெட்டி.* (C/18251)


ராஜா யாழ்ப்பாணம்

அர்ஜூன், சோனாலி
மற்றும் பலர் நடிப்பில்

கண்ணோடு காண்பதெல்லாம்

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2, 5 (புதிய நேரம்) (C/18074)

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜனி, குஷ்பூ, விஜயசாந்தி
நடிப்பில்

மன்னன்

(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்) (92242)

லஷ்சுமி இணுவில்

விஜய், தேவயானி
நடித்த

ஃப்ரெண்ட்ஸ்

(ரீல்ஸ்) STR பிலிம்ஸ் (92256)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சுப்பிரமணியம்

(நவகுமரன் மருந்தக உரிமையாளர் - மானிப்பாய்)

கோண்டாவில் மேற்கு, காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் நேற்று (12.09.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் யோகராணியின் அன்புக் கணவரும் சற்குணம், பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சதீஸ் குமார், நவசுகி (இணுவில் மத்திய கல்லூரி), அனோஜ்குமார் (இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2001) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- சு.சதீஸ்குமார் (மகன்)

*காங்கேசன்துறை வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (92257)

## முத்தையா நடராசா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா நடராசா நேற்று(12-09-2001) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் சிவகுருநாதன், சிவானந்தன், காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.09.2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 2.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- ந.சிவானந்தன் (மகன்)

*75, சாத்திரியார் வீதி,*
*அரியாலை.* (92254)

## திருமதி குளோரியா சிவகாமி செபரத்தினம்

உசனைப் பிறப்பிடமாகவும் அருளையா பிளேஸ், கோப்பாயை வசிப்பிடமாகவும் 44 1/1, இந்சியம் ரோட், தெஹிவளையில் வசித்தவராகிய குளோரியா சிவகாமி செபரத்தினம் 11.09.2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கணபதிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி வேலுப்பிள்ளையின் அன்பு மருமகளும் S.V.செபரத்தினத்தின் அன்பு மனைவியும், கிறிஸ்டி (வட்டுக்கோட்டை), டொறத்தி (அல்வாய்), சுகந்தி (விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு - 13), சுமந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஏஞ்சல், கணேசராஜா, காலஞ்சென்ற டேவிட், ஜோய் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிம்றோ, ஜெறி, சுகன்ஜா, தர்ஷன், டொறின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற அருணோதயம், காலஞ் சென்ற சிவக்கொழுந்து, உமையம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி றோஸ் ஜெபமணி சின்னத்தம்பியின் (லண்டன்) மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (16.09.2001) காலை 7.00 மணியளவில் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் ஆராதனை நடைபெற்று கனத்தை அஞ்சலிக்கள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: டொறத்தி கணேசராசா (மகள்)
றோய் கொமினிக்கேசன்
அல்வாய்.
T.P.070-212590

கொழும்பு விலாசம்:
*S.V.செபரட்ணம்,*
*44 1/1, இந்சியம் றோட்,*
*தெஹிவளை.*
*01 - 761154* (C/18255)

## திருமதி இந்துமதி தவேந்திரன் B.Com.

(ஆசிரியை, புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி)

தென்புலோலி பெரியவளவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இந்துமதி தவேந்திரன் நேற்று (12.09.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் தவேந்திரனின் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்) அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2001) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தி.தவேந்திரன் (கணவர்)

*பெரியவளவு,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.* (C/18257)

## E.K. தங்கராசா

### (E.K.T. Rice Mill)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ். வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட E.K.தங்கராசா நேற்று (12.09.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியினரின் மருமகனும், இராஜலக்ஸ்மியின் அன்புக் கணவரும், சிவசுதன், சிவதர்சினி (4ஆம் வருட கலைப்பீட மாணவி, பேராதனைப் பல்கலைக்கழகம்), சிவநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகராசா, தியாகராசா, யோகராசா, செல்வராசா, தவமணிதேவி, காலஞ்சென்ற லீலாவதி, லலிதாதேவி ஆகியோரின் சகோதரரும், கனகசபாபதி காலஞ்சென்ற தியாகராசா, அன்னலக்ஸ்மி, இரத்தினசிங்கம், பாக்கியலக்ஸ்மி மகேந்திரன், திவ்வியசிரோன்மணி, லக்ஸ்மி, அலிஸ், புஷ்பலக்ஸ்மி, சிவபாலசிங்கம், சிறிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாலை 5.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: த. சிவசுதன் (மகன்)

*375, K.K.S. வீதி,*
*யாழ்ப்பாணம்.* (92251)

# கொழும்பிலுள்ள அமெ.தூதரக பாதுகாப்பு பலமடங்கு அதிகரிப்பு!

கொழும்பு,செப்.13

அமெரிக்காவின் பொருளாதார நிலையங்கள் மற்றும் பாதுகாப்புத் தலைமையகம் என்பன மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு மேலும் பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கொமாண்டோ படையணியைச் சேர்ந்த வீரர்கள் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் பலவும் படிப்படியாகத் தகர்க்கப்பட்ட சந்தர்ப்பங்களில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பும் அவ்வப்போது அதிகரிக்கப்பட்டு வந்ததாகவும் -

எனினும் நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடத்தப்பட்ட பெரும் தாக்குதல் சம்பவங்களை அடுத்து கொழும்பில் உள்ள தூதரகத்தின் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டதாகவும் பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

இலங்கையுடன் இராஜதந்திர உறவுகளை வைத்திருக்கும் இந்தியா, பிரிட்டன், நோர்வே ஆகிய நாடுகளின் தூதரகங்களினது பாதுகாப்பும் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அது மேலும் தெரிவித்தது. (ம-7)

## உயிரிழந்தோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக புளொரிடா, பொஸ்டன், மஸாசூசெட்ஸ் ஆகிய பகுதிகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இஸ்லாமியத் தீவிரவாதத் தலைவரான ஒஸாமா பின்லேடனின் ஆள்களே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கருதுகின்றனர். இது தொடர்பான சகல ஆதாரங்களும் விரைவில் கிட்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். (உ)

## ரிக்கெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான சூழ்நிலை உருவானது. உடனடியாக மேலதிகப் பொலீஸார் அங்கு அழைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் ஈ.பி.டி.பி. அமைப்பின் பிரமுகரும் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவருமான என். மதனராஜனும் மற்றும் ஈ.பி.டி.பி. பிரமுகர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

தாம் வழங்கிய பட்டியலின்படி சகலருக்கும் பயணச்சீட்டு வழங்க வேண்டும் என்று மாணவர்கள் கோரினர்.

ஆனால் 60பேருக்கு மட்டுமே பயணச்சீட்டு வழங்கமுடியும் என்று ஈ.பி.டி.பி. தரப்பினர் தெரிவித்தனர். இதனால் அங்கு பெரும் களேபரம் இடம்பெற்றது.

இக்களேபரங்களைத் தொடர்ந்து இறுதியில் 80 மாணவர்களுக்கு நேற்று பயணச்சீட்டு வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக் கப்பலில் செல்ல பயணச்சீட்டுக்கள் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. (ம-3)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபந்தனைகளை ஏற்று அரசு செயற்படுமானால் நாட்டில் அபிவிருத்தி துரிதமாக ஏற்படும் என்றும் அவர் மகாநாயக்கரிடம் நம்பிக்கை தெரிவித்தார். "அதிகாரப் பகிர்வு குறித்து புலிகளுடன் அரசு பேச்சு நடத்தக் கூடாது; அதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம்" - என்றும் அவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# 20 பேர் கொண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களின் எண்ணிக்கையை இருபதுக்குப் பதிலாக இருபத்தைந்தாகக் குறைக்கலாம் என அரசுத் தரப்பில் புதிதாக வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்க ஜே.வி.பி. மறுத்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

புதிய அமைச்சரவையின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு வசதியாக - புதிய அமைச்சரவை உருவாக்கப்படுவதற்கு உதவியாக - தற்போதைய அமைச்சர்கள் அனைவரையும் ராஜினாமாச் செய்யுமாறு அரசு உயர் வட்டாரங்கள் வற்புறுத்தியதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் அதற்கு அவர்களில் பலர் இணங்காததால், அந்த அமைச்சர்களை பதவி விலக்கி விட்டு புதிய அமைச்சரவையை உருவாக்கலாம் என்றும் ஜனாதிபதி சந்திரிகா கருதுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை -

பிரதமர் பதவி இழந்தால் அல்லது பதவி விலகினால் அவரோடு சேர்ந்து - அவருக்குக் கீழ் உள்ள - முழு அமைச்சர்களும் - அமைச்சரவையும் - ராஜினாமாச் செய்து விட்டதாகக் கருதப்படுவது வழமை.

இந்த நடைமுறையைக் காட்டிப் பிரதமரை ராஜினாமாச் செய்ய வைப்பதன் மூலம் முழு அமைச்சர்களையும் இலகுவாகப் பதவி விலகியவர்களாகக் கருதச் செய்யலாம்.

இதற்காக -

இன்று அல்லது நாளை பிரதமர் தமது பதவியை ராஜினாமாச் செய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-7)

## அரசில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு தான் ஆதரவாக இருந்து செயற்படுவதற்கு ரவூப் ஹக்கீம் விருப்பம் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ.எல்.அதாவுல்லா, மொஹிதீன் அப்துல் காதர், பசீர் சேகுதாவூட் ஆகியோரும் ஜனாதிபதியைச் சந்தித்த குழுவில் அடங்கியிருந்தனர். நிறைவேற்று ஜனாதிபதி முறையைப் பற்றியும் பேச்சுக்களில் ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

சில திருத்தங்களுடன் ஜனாதிபதி முறையை தொடர்ந்தும் வைத்திருக்கலாம் என்று தூதுக் குழுவினர் தெரிவித்ததாகவும் -

ஆனால் ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்ததாகவும் - மேலும் கூறப்பட்டது. (ம)




யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஆத்திசூடி அருள்மிகு
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய
அலங்கார உற்சவ பூர்த்தி விழா
(மண்டலாபிஷேக பூர்த்தி விழா விஞ்ஞாபனமும் ஆயிரத்தெட்டு கலச சங்காபிஷேகமும்)

காலம் :- இன்று (13-09-2001) வியாழக்கிழமை
உற்சவ விவரம்:
காலை :- 7.30 மணிக்கு ஆயிரத்தெட்டு கலச சங்காபிஷேகம்
நண்பகல் :- 12.30 மணிக்கு மாகேஸ்வர பூசை (அன்னதானம்)
மாலை :- 3.30 மணிக்கு சாயரட்சை பூசையும் அதனைத் தொடர்ந்து திருவூஞ்சல் பூசையும் அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாவரும் காட்சியும் 8.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று அதனை தொடர்ந்து விநாயகர் மகத்துவம் பற்றிய சமய சொற்பொழிவும் நடைபெறும்.

குறிப்பு:- விசேட மேளக்கச்சேரி சுந்தரமூர்த்தி குழுவினர், மாக்கையா நித்தியானந்தம் காரை கணேசன் மைந்தர்.

விழா உபயகாரர்
(அற்புதா ரேடிங் கொம்பனி)
(C/18254)



SCIENCE CENTRE
NELLIADY
"இரசாயனவியல்"
By:- K.சிவச்சந்திரன்
✪ கடந்தகால வினாக்களின் அலகு ரீதியான மீட்டல் வினா விடை வகுப்பு.
ஆரம்பம்: நாளை (14.09.2001) வெள்ளிக்கிழமை
பி.ப.3.15 மணி (ப.நே.)
(92183) - நிர்வாகி.



BRIGHTMAN
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L 2001
பரீட்சையெடுத்த மாணவர்களுக்கான
பௌதிகவியல் மீட்டல் வகுப்பு
BY:- ஜெயசீலன் (92220)
ஆரம்பம:-15/09/2001 SAT -7.00am



NEW HARY'S INSTITUTE
Vaddukoddai East Sithankerny
SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
BY:- B.SASITHARAN
புதிய பிரிவு ஆரம்பம்: 15-09-2001
மு.ப. 10.30மணி (92228)



A/L எடுத்தவர்களுக்கான ஆங்கில வகுப்பு
3 ஆவது பிரிவு ஆரம்பம்
16.09.2001
OXFORD ENGLISH ACADEMY
BY:
Mr.B.Jothy
நெல்லியடியில்:- 3 p.m.
அனுமதியை MATHS CENTRE இல் பெறவும்.
பருத்தித்துறையில்:- 4 p.m.
பத்திரகாளி கோயில் வீதி, பஸ் நிலையம் அருகில்.
(அனுமதிக்கு முந்துங்கள்)
(92145)



வெளிவந்துவிட்டது
அளவையியலும் விஞ்ஞானமுறையும 1&11
1998,1999, 2000,2001
(புள்ளிவழங்கும் திட்டத்துடன்)
கடந்தகாலப்பரீட்சை வினாத்தாளகள்
யாழ். நகரின் பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்
(சொற்ப பிரதிகளே உள்ளன)
(92255)



போரினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக
TRRO நிறுவனம் அறிமுகப்படுத்தும்,
இலவசம்
பிரவாகம்

இலவச கணனிப் பயிற்சிநெறித் திட்டம்
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

TRRO நிறுவனம் அறிமுகப்படுத்தும் பிரவாகம் கணனி அறிவு மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விரும்புபவர்கள் 20ஆம் திகதிக்கு முன் எமது நிறுவனத்துடன் தொடர்புகொண்டு விவரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் பெற்று விண்ணப்பிக்கவும்

பயிற்சி நெறிகள் விவரம்

| | |
|---|---|
| MS Word | PageMaker |
| MS Excel | CorelDraw |
| MS Access | Visual Basic |
| MS Power point | |

பயிற்சி நெறிகளுக்கு பயிற்சிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது

பயிற்சிநெறிகள் நடைபெறும் இடங்கள்
1. மருதனார்மடம் சந்தி, மருதனார்மடம்
2. 106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

ஆரம்பம்: 25.09.2001

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
Chairman,
TRRO Computer Training Centre,
106, 4th Cross Street, Jaffna.
(C/18252)



FREE
Computer Hardware and Software Training Programme 2001

- For the First 500 Students Only.
- You pay Only 500/- as Registration fees
- Specially Designed for A/L Students

MICRO-WIN
337 KASTHURIAR ROAD JAFFNA
For Further Details
Tel 021-2827
021-3497



324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
இலவச கணனிப்பயிற்சி
ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனத்தினர் A/L பரீட்சையை நிறைவு செய்யும் மாணவர்களுக்காக விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்.
(C/18253) ஆரம்பம்: 15-09-2001. பதிவுகளை 14.09.2001க்கு முன் மேற்கொள்ளவும்.



THE ROTARY CLUB OF JAFFNA
Cordially Invites
For the
GUEST SPEAKER'S DAY

Venue : 12, Sivagurunathar lane, Jaffna.
Time : September 13th 2001 at. 4.45 p.m.
Guest Speaker : Ms. ELEONORA TASCO (Head of Field Office, Children Affected by Armed Conflict, UNICEF)
Topic : "COMPULSORY EDUCATION CAMPAIGN" (In English)

President & Members
Rotary Club Of Jaffna
(C/18237)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.